# 2

# தேசிய உற்பத்தியும் செலவினமும்

## 2.1 பொதுநோக்கு

**இலங்கைப் பொருளாதாரம் 2013ஆம் ஆண்டின் 7.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் 7.4 சதவீதமான உண்மைப் பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தக்கவைத்தது.** உள்நாட்டு பக்கத்தில், தாழ்ந்த மற்றும் நிலையான பணவீக்கத்திற்கு இணையாக தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையினால் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் சாதகமாக துணைபுரியப்பட்டதுடன் பொருளாதார வளர்ச்சியை நிலைப்படுத்துவதற்கு பங்களித்திருந்தது. வெளிநாட்டுப் பக்கத்தில், ஐக்கிய அமெரிக்காவின் மீட்சி மற்றும் ஐரோப்பிய வலயத்தின் படிப்படியான மீட்சி என்பன ஏற்றுமதி வளர்ச்சிக்கு உதவின. எவ்வாறெனினும், உலக பண்டங்களின் விலைகளின் வீழ்ச்சி தேறிய வெளிநாட்டுக் கேள்வியின் வளர்ச்சியின் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. உற்பத்தி அணுகுமுறை மதிப்பீடுகளின்படி ஆண்டு காலப்பகுதியில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளினால் வேளாண்மை துறையின் செயலாற்றமானது குறைவாகக் காணப்பட்ட போதிலும் பொருளாதார வளர்ச்சியானது பிரதானமாக சேவைத்துறையின் வளர்ச்சி, அதனைத் தொடர்ந்த கைத்தொழில் துறையின் ஆரோக்கியமான செயலாற்றம் என்பவற்றினால் தூண்டப்பட்டிருந்தது. செலவினங்களின் பக்கத்தில் உண்மை மற்றும் பெயரளவு ரீதியிலான தேறிய வெளிநாட்டுக் கேள்வி ஆண்டுகாலப் பகுதியில் மெதுவடைந்த போதிலும் அதிகரித்த உள்நாட்டுச் செலவினங்களுக்கு நுகர்வு மற்றும் முதலீட்டிற்கான கேள்வி ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வளர்ச்சி துணைபுரிந்தது. ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான கொள்வனவு, சம்பளங்கள் மற்றும் கூலிகளின் மீதான செலவினங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு அரச நுகர்வு மீதான செலவை அதிகரிக்கச் செய்திருந்த போதிலும் குறைந்த வட்டிவீதம் மற்றும் அதிகரித்த செலவிடத்தக்க வருமானம் என்பவற்றின் ஊக்குவிப்புக்களினால் தனியார் நுகர்வு மீதான செலவினம் விரிவடைந்திருந்தது. முக்கியமாக கட்டடவாக்க செயற்பாடுகளின் மீது அரசாங்கம் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் முதலீடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் இணைந்த பெறுபேறே முதலீட்டு செலவினத்தின் அதிகரிப்புற்கு வகைகூறியது. இதற்கிணங்க, 2014இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு 29.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் மொ.உ.உற்பத்தியில் முறையே 21.1 சதவீதம் மற்றும் 27.0 சதவீதத்தினால் அதிகரித்தன. அரசாங்கத்தின் குறைச் சேமிப்பின் அதிகரிப்பிற்கு மத்தியிலும் தனியார் சேமிப்புக்களின் தொடர்ச்சியான அதிகரிப்பு உள்நாட்டு சேமிப்புக்களின் வளர்ச்சிக்குப் பங்களித்தது. தொழிலாளர் பணவனுப்பல் கணக்கின் மீதான தேறிய நடைமுறை மாற்றங்களின் கணிசமானளவு வளர்ச்சி தேசிய சேமிப்புக்களின் மேம்பாட்டிற்குப் பங்களித்த வேளையில், ஆண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தில் ஏற்பட்ட மேம்பாடுகளும் தேசிய சேமிப்பில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதன்படி, தேசிய சேமிப்புக்கள் மற்றும் முதலீடு என்பவற்றிற்கிடையேயான வேறுபாடான வள இடைவெளி 2014இல் மொ.உ.உற்பத்தியில் 2.7 சதவீதத்திற்கு குறுக்கமடைந்ததுடன் வெளிநாட்டு நிதியிடல் மூலங்களில் தங்கியிருந்தலையும் குறைத்திருந்தது.

அட்டவணை 2.1

**நிலையான (2002) விலைகளில் கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | மாற்றத்தின் வீதம் (%) | | மாற்றங்களுக்கான பங்களிப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2013(அ) | 2014(ஆ) | 2013(அ) | 2014(ஆ) | 2013(அ) | 2014(ஆ) |
| வேளாண்மை | 4.7 | 0.3 | 7.1 | 0.5 | 10.8 | 10.1 |
| 1. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காடாக்கல் | 4.5 | - 0.2 | 6.0 | - 0.3 | 9.5 | 8.8 |
| 1.1 தேயிலை | 3.4 | 1.2 | 0.4 | 0.2 | 0.9 | 0.9 |
| 1.2 இறப்பர் | - 9.1 | - 32.3 | - 0.3 | - 0.8 | 0.2 | 0.1 |
| 1.3 தெங்கு | - 16.1 | 7.9 | - 2.3 | 0.9 | 0.8 | 0.8 |
| 1.4 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 8.5 | - 15.0 | 0.4 | - 0.8 | 0.4 | 0.3 |
| 1.5 நெல் | 19.5 | - 16.7 | 3.8 | - 3.6 | 1.6 | 1.2 |
| 1.6 கால்நடை வளர்ப்பு | 6.3 | 3.1 | 0.7 | 0.3 | 0.8 | 0.8 |
| 1.7 ஏனைய உணவுப் பயிர்கள் | 4.3 | 7.0 | 2.2 | 3.4 | 3.6 | 3.6 |
| 1.8 பெருந்தோட்ட அபிவிருத்தி | 3.3 | 0.3 | 0.1 | 0.0 | 0.3 | 0.2 |
| 1.9 விறகு மற்றும் காடாக்கல் | 5.0 | 3.1 | 0.4 | 0.2 | 0.6 | 0.5 |
| 1.10 ஏனைய வேளாண்மைப் பயிர்கள் | 7.6 | - 2.5 | 0.4 | - 0.1 | 0.4 | 0.3 |
| 2. மீன்பிடி | 6.2 | 4.5 | 1.2 | 0.8 | 1.3 | 1.3 |
| கைத்தொழில் | 9.9 | 11.4 | 41.6 | 48.2 | 31.1 | 32.3 |
| 3. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 11.5 | 11.0 | 4.4 | 4.3 | 2.9 | 3.0 |
| 4. தயாரிப்புத்துறை | 7.5 | 8.0 | 17.6 | 18.6 | 17.1 | 17.2 |
| 4.1 பதனிடுதல் (தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு) | 0.6 | 4.8 | 0.0 | 0.3 | 0.5 | 0.5 |
| 4.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 7.9 | 8.5 | 16.9 | 17.9 | 15.6 | 15.8 |
| 4.3 குடிசைக் கைத்தொழில் | 5.1 | 2.5 | 0.7 | 0.3 | 1.0 | 1.0 |
| 5. மின்வலு வாயு மற்றும் நீர் | 10.3 | 4.5 | 3.4 | 1.5 | 2.4 | 2.4 |
| 5.1 மின்வலு | 11.3 | 4.2 | 3.3 | 1.2 | 2.2 | 2.1 |
| 5.2 வாயு | 1.6 | 9.3 | 0.0 | 0.2 | 0.2 | 0.2 |
| 5.3 நீர் | 3.8 | 5.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 6. கட்டடவாக்கம் | 14.4 | 20.2 | 16.1 | 23.8 | 8.7 | 9.7 |
| பணிகள் | 6.4 | 6.5 | 51.3 | 51.3 | 58.1 | 57.6 |
| 7. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 5.5 | 8.0 | 17.4 | 24.5 | 22.7 | 22.8 |
| 7.1 இறக்குமதி வர்த்தகம் | 2.9 | 9.4 | 3.2 | 9.9 | 7.8 | 7.9 |
| 7.2 ஏற்றுமதி வர்த்தகம் | 6.7 | 4.6 | 3.6 | 2.4 | 3.9 | 3.8 |
| 7.3 உள்நாட்டு வர்த்தகம் | 6.9 | 8.1 | 10.6 | 12.2 | 11.0 | 11.1 |
| 8. உணவகங்களும் விடுதிகளும் | 22.3 | 11.5 | 2.1 | 1.2 | 0.8 | 0.8 |
| 9. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 9.4 | 7.3 | 18.5 | 14.4 | 14.6 | 14.6 |
| 9.1 போக்குவரத்து | 9.4 | 7.3 | 15.2 | 11.9 | 12.0 | 12.0 |
| 9.2 சரக்குக் கையாளல் - துறைமுகங்களும் வான்போக்குவரத்தும் | 3.1 | 4.0 | 0.3 | 0.4 | 0.7 | 0.6 |
| 9.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் | 11.4 | 8.0 | 3.0 | 2.1 | 2.0 | 2.0 |
| 10. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள், மற்றும் ஏனையவை. | 5.9 | 6.6 | 7.3 | 7.8 | 8.7 | 8.7 |
| 11. வதிவிட சொத்துரிமை | 2.9 | 1.3 | 1.0 | 0.4 | 2.4 | 2.3 |
| 12. அரச பணிகள் | 2.8 | 1.4 | 2.7 | 1.3 | 6.5 | 6.2 |
| 13. தனியார் பணிகள் | 7.3 | 5.4 | 2.3 | 1.7 | 2.3 | 2.3 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 7.2 | 7.4 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | - 36.8 | - 1.1 | | | | |
| மொத்த தேசிய உற்பத்தி | 6.6 | 7.5 | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 2.2 மொ.உ.உற்பத்தி, தலைக்குரிய மொ.உ.உற்பத்தி மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தி

**நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2013இன் ரூ.8,674 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 67 பில்லியன்) ஒப்பிடுகையில் 2014இல் ரூ.9,785 பில்லியனாக (ஐ.அ.டொலர் 75 பில்லியன்) மதிப்பிடப்பட்டது.** இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் மொ.உ.உற்பத்தி 12.8 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. 2013இல் பதிவு செய்யப்பட்ட 14.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது சிறியதொரு வீழ்ச்சியாகும். உண்மைப் பொருளாதார வளர்ச்சி முன்னைய ஆண்டின் வளர்ச்சியைக் காட்டிலும் மேலாகக் காணப்பட்ட போதிலும் 2013இன் 6.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலிருந்து இவ்வாண்டுப் பகுதியில் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த மொ.உ.உற்பத்தியின் உள்ளடக்கச் சுருக்கியினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த விலை மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாக விளங்கியது.

**2013இன் ரூ.423,484 உடன் ஒப்பிடுகையில் 2014 இற்கான தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ரூ.473,261 இல் மதிப்பிடப்பட்டது.** இது 11.8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவு

## சிறப்புக்குறிப்பு 2

## இலங்கையில் தேசிய கணக்குகளைத் தொகுக்கும் செயன்முறையினைத் தரமுயர்த்துதல்[1]

நாட்டின் தேசிய கணக்குகள், குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருளாதார மேம்பாடுகளினைக் கணிப்படும் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டல்களினை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்படுகிறது. அதேநேரம், இப்புள்ளிவிபரங்கள் பொருளாதாரத்தின் அபிவிருத்திகளினை விபரிக்கின்ற பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகளின் தொடரினை உருவாக்க உதவுகிறது. இலங்கை தேசிய கணக்குகள் தற்போது 1993 மற்றும் 1968ஆம் ஆண்டு தேசியக் கணக்கீட்டு முறைமையின் வழிகாட்டல்களுடன் இணங்கும் விதத்தில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகிறது. எனினும், அண்மைக் காலங்களில் ஏற்பட்ட கோட்பாட்டு ரீதியிலான முன்னேற்றங்களுடன் சேர்ந்து தேசிய கணக்குகளினைத் தொகுத்தல் செயன்முறை ஒரு கணிசமானளவு முறையியல் மேம்பாட்டைக் காட்சிப்படுத்தியது. இதன்படி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையில் தேசிய கணக்குகளினைத் தொகுத்தல் தொழில்நுட்பங்களினை பன்னாட்டுப் பின்னணியின் அபிவிருத்திகளுடன் இணைந்துசெல்லும் விதத்தில் மேம்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகளினை எடுத்துள்ளது. இச்செயற்பாட்டில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது, தேசிய கணக்குகள் புள்ளிவிபரங்களைத் தொகுத்தலில் உலகின் பல்வேறு புள்ளிவிபரங்கள் பணியகத்தினால் பின்பற்றப்படும் பிந்திய வழிகாட்டல்களான தேசிய கணக்கீடுகள் முறைமை 2008 வழிகாட்டல்களினைப் பின்பற்றும்.

### தேசிய கணக்குகள் தொகுப்பு தொடர்பில் இடம்பெற்றுவரும் முக்கிய மாற்றங்கள்

தேசிய கணக்குகள் தொகுப்புச் செயன்முறையை தரமுயர்த்துவதில் தேசிய கணக்குகள் முறைமை 2008 வழிகாட்டல்களினைப் பின்பற்றுகையில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2015 தொடக்கம் நடைமுறைப்படுத்த வேண்டிய மாற்றங்களினை ஏற்கனவே முன்னெடுத்துள்ளது. தேசிய கணக்குகளிலிருந்து பெறப்பட்ட முக்கிய பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகளிலொன்றான மொ.உ.உற்பத்தி தொகுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு சுருக்கமாகத் தரப்படுகிறது.

- அடிப்படையாண்டினை 2010இற்கு திருத்துதல்
- பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப் படுத்தல் திருத்தம் 4 இற்கமைவாக பொருளாதாரத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்குவதன் மூலம் மொ.உ.உற்பத்தியின் உள்ளடக்கத்தினை விரிவாக்குதல்
- புதிய துறைவாரியான வகைப்படுத்தலின் கீழ் மொ.உ.உற்பத்தியினை வெளிப்படுத்தல்
- செலவு அணுகுமுறையின் கீழ் காலாண்டு மொ.உ.உற்பத்தியினை மதிப்பீடு செய்தல்
- உற்பத்தி மற்றும் செலவு அணுகுமுறைகளிற்கு ஒத்ததாக வருமான அணுகுமுறையின் கீழ் வருடாந்த மொ.உ.உற்பத்தியினை மதிப்பீடு செய்தல்
- அடிப்படை விலை எண்ணக்கருவினைப் பயன்படுத்தி உற்பத்தி அணுகுமுறையின் கீழ் மொ.உ.உற்பத்தியினை மதிப்பீடு செய்தல்

### அடிப்படையாண்டினை 2010 இற்கு திருத்துதல்

நாட்டின் உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியானது நிலையான விலைகளினைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகிறது. இதன்படி, அடிப்படையாண்டு என அறியப்படுகின்ற குறிப்பிட்ட ஆண்டின் விலைகளில், குறிப்பிட்ட ஆண்டிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டிற்குமான நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தியினைக் கணிப்பது பொருத்தமானது என்பதனால் மீள்மதிப்பீடு, பணச்சுருக்கம் அல்லது மிகைக்கணிப்பு ஆகிய முறைகளைப் பின்பற்றி நடைமுறைச் சந்தை விலைகளின் கீழ் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் உள்ளடக்கப்பட்ட விலைகளின் தாக்கம் அகற்றப்பட்டது. இந்நோக்கத்திற்காக, குறைந்த பொருளாதார தளம்பல்களுடனான பொருத்தமான அடிப்படியாண்டினை இனங்காண்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் நிலையான விலையில் மொ.உ.உற்பத்தியினைக் கணிப்பிடுகையில் அவ்வாண்டின் விலைகள் நிலையானதாகக் கருதப்படுகின்றது. மேலும், தேசிய கணக்குகள் முறைமை வழிகாட்டல்கள் ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கொரு தடவை அடிப்படையாண்டினை விசேடமாக நுகர்வு வகைகள், புதிய உற்பத்தி மற்றும் பணிகளின் தோற்றம் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற பொருளாதாரத்தில் ஏற்படும் அமைப்பு மாற்றங்களினை உள்ளடக்குவதற்காக மாற்றத்தின் தேவைப்பாட்டினை வலியுறுத்துகிறது. எனினும், இலங்கையில் தற்போதைய நிலையான விலை, மொ.உ.உற்பத்தித் தொடர்களின் அடிப்படையாண்டு 2002 ஆகும். இலங்கைப் பொருளாதாரம் அண்மைக் காலத்தில் அவதானிக்கக்கூடிய அமைப்பு ரீதியான மாற்றங்களினை அனுபவித்துள்ளது. விசேடமாக சிவில் யுத்தத்தின் முடிவின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களினை ஏனைய பொருளாதாரங்களுடன் இணைத்தமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளினை விரிவாக்குவதற்கான அமைதியான சூழலினை உருவாக்கியமை என்பன அடிப்படையாண்டினை மாற்றுவதன் தேவைப்பாட்டினை வலியுறுத்துகிறது. இவ்வபிவிருத்திகளுக்கிணங்க, 2015 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உண்மை மொ. உற்பத்தி மதிப்பீட்டின் அடியாண்டினை 2010 இலிருந்து மாற்றுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள வேளையில், புதிய அடிப்படையாண்டின் கீழ் நிலையான விலை மொ.உ.உற்பத்தியின் தொடர்கள் 2010 இலிருந்து கிடைக்கப் பெறக்கூடியதாகக் காணப்படும். இதன்படி, ஒவ்வொரு ஆண்டினதும் புதிய அடிப்படையாண்டினை அடிப்படையாகக் கொண்டு

1. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தகவல்களை இலங்கை மத்திய வங்கி அங்கீகரிக்கின்றது.

2

தேசிய உற்பத்தியும் செலவினமும்

மதிப்பிடப்பட்ட நிலையான விலை, மொ.உ.உற்பத்தியின் சதவீத மாற்றம் 2015 இலிருந்து பொருளாதாரத்தின் உண்மையான வளர்ச்சியினைப் பிரதிபலிக்கின்றது.

**மொ.உ.உற்பத்தியின் உள்ளடக்கத்தினை விரிவாக்குதல்**

மொ.உ.உற்பத்தியின் தற்போதைய தொகுப்புச் செயன்முறைக்கெதிரான முக்கிய விமர்சனங்களிலொன்றாக பொருளாதாரத்தின் வளர்ச்சிடைந்து செல்லும் மாற்றங்கள் மற்றும் அமைப்பு ரீதியிலான நகர்வுகள் என்பவற்றினை விபரிக்கும் சில பொருளாதார நடவடிக்கைகள் போதுமானதல்ல என்று கருதப்படுகிறது. புதிய கட்டமைப்பின் கீழ் போதுமானளவிற்கு உள்ளடக்கப்படாத குடும்ப அலகு உற்பத்தி போன்ற பொருளாதார நடவடிக்கைகள், கலை மற்றும் பொழுதுபோக்கு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய தகவல்கள், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற பணிகளில் பன்னாட்டு நியமங்கள் கைத்தொழில் பகுப்பாய்வு திருத்தம் 4 இலிருந்து பெறப்பட்ட இலங்கைக் கைத்தொழில் பகுப்பாய்வின் அடிப்படையில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இது உண்மை நியதிகளில் மொ.உ.உற்பத்தியில் கணிசமானளவு அதிகரிப்பினை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். எனினும், இப்புதிய கட்டமைப்பின் கீழ் சில பொருளாதார நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல்களினை மதிப்பீடு செய்யும் முறையியலுடன் தொடர்புபட்ட உள்ளார்ந்த மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இதுவும் மொ.உ.உற்பத்தியின் உண்மைப் பெறுமதியில் அதிகரிக்கும் அல்லது குறைக்கும் தாக்கத்தினைக் கொண்டுள்ளது. இதன் விளைவாக, புதிய முறையியலின் கீழ் இம்மாற்றங்களின் ஒட்டுமொத்த விளைவாக உருவாக்கப்பட்ட உண்மைப் பெறுமதிகளிலான மொ.உ.உற்பத்தி தற்போதைய முறைமையின் கீழ் கூடியதாகவோ அல்லது குறைவானதாகவோ காணப்படலாம். மேலும், உண்மைப் பெறுமதி மொ.உ.உற்பத்தியின் ஏதேனும் மாற்றங்கள் சில குறிகாட்டிகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும் இவை மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக குறிப்பிடப்படுகிறது. எனவே, இப்புதிய முறையியலின் கீழ் பெறப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட குறிகாட்டிகளை தற்போதைய முறைமையின் கீழ் உருவாக்கப்பட்ட குறிகாட்டிகளுடன் நேரடியாக ஒப்பிடமுடியாது.

**மொ.உ.உற்பத்தியினை மூன்று அணுகுமுறைகளிலும் அத்துடன் புதிய துறைவாரியான வகைப்படுத்தலின் கீழும் காட்டுதல்**

மொ.உ.உற்பத்தியானது தற்போது உற்பத்தி, செலவினம் மற்றும் வருமானம் போன்ற மூன்று அணுகுமுறைகளின் கீழ் மதிப்பிடப்படுகிறது. இது உற்பத்தி அணுகுமுறையின் கீழ் காலாண்டு மற்றும் ஆண்டு அடிப்படையிலும் செலவின மற்றும் வருமான அணுகுமுறைகளின் கீழ் ஆண்டு அடிப்படையிலும் காட்டப்படுகிறது. உற்பத்தி அணுகுமுறையின் கீழ் மொ.உ.உற்பத்தியினை வெளிப்படுத்துகையில் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் போன்ற பகுதிகளுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகள் இனிமேல் பொருளாதாரத்தின் துறைகளாகக் கருதப்படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்க மாற்றங்களிலொன்றாகக் காணப்படுகிறது. இப்புதிய முறையியலின் கீழ் பன்னாட்டு வழிகாட்டல்களைப் பின்பற்றிய ஒரு புதிய துறைவாரியான வகைப்படுத்தல் அறிமுகப்படுத்தப்படலாம். இதனால், பொருளாதார நடவடிக்கைகள் துறைகளாகக் கருதப்படமாட்டாது. மாறாக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொருளாதாரத்தில் ஆர்வலர்கள், ‘நிதியியல் துறை’, ‘நிதியில்லா துறை’, பொது அரசாங்கத் துறை’, ‘குடும்ப அலகுத் துறை’ மற்றும் ‘குடும்ப அலகுத் துறையினருக்குப் பணியாற்றும் இலாபமற்ற நிறுவனங்கள்’ போன்ற ஐந்து துறைகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றனர். மொ.உ.உற்பத்தியானது இவ்வொவ்வொரு துறைகளின் கீழ் ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கைக்காக மதிப்பிடப்படுகிறது. மேலும், பன்னாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய சீராக்கங்களை மேற்கொள்ளும் பொருட்டு வெளிநாட்டுத் துறையும் தேவைப்படுமிடத்து உள்ளடக்கப்படலாம். இது பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையினதும் ஒப்பீட்டு ரீதியிலான முக்கியத்துவத்தினையும் மற்றும் ஒவ்வொரு துறைக்குமான பங்களிப்பினை கணிப்பிடுதலினையும் இயலச்செய்கிறது. எனவே, தேசியக் கணக்குகளின் பகுப்பாய்வு பல்வேறு கோணங்களிலிருந்தும் மேற்கொள்ளப்படலாம். மேலும், இத்துறை வகைப்படுத்தலானது, ஒரே மாதிரியான துறை ரீதியிலான வகைப்படுத்தலினைப் பின்பற்றும் நாடுகளுடன் பன்னாட்டு ஒப்பீடுகளையம் பகுப்பாய்வுகளினையும் மேற்கொள்ள அனுமதிக்கின்றது.

இப்புதிய கட்டமைப்பின் கீழ், மொ.உ.உற்பத்தித் தரவுகள் வருமான அணுகுமுறையில் மட்டுமல்லாது அதற்கிணையான உற்பத்தி மற்றும் செலவின அணுகுமுறைகளிலும் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, வருமான அணுகுமுறையின் கீழ் மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடும் பொருட்டு வருமானம் உருவாக்கப்படும் வருமான விடயங்களான தொழிலாளர் இழப்பீடுகள், மொத்த தொழிற்பாட்டு மிகை, கலப்பு வருமானம், நிலையான மூலதன நுகர்வு மற்றும் வரிகள் கழித்த உற்பத்தி மீதான ஏனைய உதவுதொகை போன்றன மதிப்பிடப்பட்டு உற்பத்திகள் மீதான உதவுதொகைகள் மற்றும் வரிகளிற்குச் சீராக்கப்படும். தொழிலாளர் இழப்பீடுகள் பொருளாதார நிறுவனங்களினால் தொழிலாளர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பவற்றினை உள்ளடக்குகின்ற வேளையில் தொழிற்பாட்டு மிகை, உழைப்பு தவிர்ந்த உற்பத்திக் காரணிகளினூடாக உருவாக்கப்படுகிறது. கலப்பு வருமானமானது வீட்டுத்துறை உழைப்பினைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதலினூடாக வீட்டுத்துறையினருக்கு மட்டுமே உருவாக்கப்படுகிறது. நிலையான மூலதன நுகர்வானது உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்களிற்காக உருவாக்கப்பட்ட வருமானமாகும். உற்பத்திச் செயன்முறையின் போது அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட உற்பத்திகள் மீதான வரிகள் நீங்கலான உரிமக் கட்டணம், நிலையான விதிப்பனவுகள் வடிவிலான வருமனாங்கள் என்பன உற்பத்திகள் மீதான ஏனைய வரிகளாக

கருதப்படுகின்ற வேளையில் உற்பத்திச் செயன்முறையின் போது வழங்கப்பட்ட உதவுதொகைகள் உற்பத்தி மீதான உதவுதொகைகளாக கருதப்படுகின்றன. இவ்வொவ்வொரு விடயங்களின் கீழும் உருவாக்கப்பட்ட வருமானம் துறை வகைப்படுத்தலில் விபரிக்கப்பட்டபடியான ஒவ்வொரு துறைகளின் கீழும் மதிப்பிடப்படுகிறது.

செலவின அணுகுமுறையில் இப்புதிய கட்டமைப்பின் ஆண்டு அடிப்படைக்கு மேலதிகமாக, காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளும் 2015 இலிருந்து கிடைக்கும். இதன் விளைவாக, செலவினம் இறுதி நுகர்வுச் செலவினம் மற்றும் மொத்த மூலதன அமைப்பாக்கம் ஆகிய இரண்டு முக்கிய விடயங்களின் கீழ் மதிப்பிடப்படுகின்ற வேளையில் செலவின அணுகுமுறையில் மொ.உ.உற்பத்தியினை பெற்றுக்கொள்வதில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான செலவினம் என்பன சீராக்கப்படுகின்றன.


**அடிப்படை விலைக் கோட்பாட்டினைப் பயன்படுத்தி உற்பத்தி அணுகுமுறையின் கீழ் மொ.உ.உற்பத்தியினை மதிப்பீடு செய்தல்**

இப்புதிய முறையியலின் கீழ் ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையினதும் பெறுமதிகூட்டல் அடிப்படை விலைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படும். தேசிய கணக்கீடுகளின் முறைமை 2008இன்படி அடிப்படை விலையானது கொள்வனவாளரிடமிருந்து உற்பத்தியாளர் பெற்றுக்கொண்டதும் அரசாங்கத்தின் மீது மாற்றியமைக்கப்பட்டதுமான பொருட்களின் மீதான வரிகள் நீக்கப்பட்ட போதிலும் அரசாங்கத்திடமிருந்து உற்பத்தியாளர் பெற்றுக்கொள்ளும் ஏதேனும் மானியங்களை உள்ளடக்குவதுடன் கொள்வனவாளருக்கு விதிக்கப்பட்ட விலைகளை குறைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இதன்படி, சந்தை விலையிலான மொ.உ.உற்பத்தியானது உற்பத்திகள் மீதான வரிகளினைச் சேர்ப்பதன் மூலமும் உதவுதொகைகளை மீளக் கழிப்பதன் மூலமும் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

செய்ததுடன் 2013இன் வளர்ச்சியான 13.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது சிறிதளவு வீழ்ச்சியைக் கொண்டதாகும். இதற்கு மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கியில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். அதேவேளை, ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2013இன் ஐ.அ.டொலர் 3,280 இலிருந்து 2014இல் ஐ.அ.டொலர் 3,625 இற்கு அதிகரித்ததன் மூலம் நாடு தலைக்குரிய நடுத்தர வருமான போக்கிற்குள் முன்னோக்கி நகர்ந்தது.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்காக மொ.உ.உற்பத்தியை சீராக்கம் செய்ததன் மூலம் பெறப்பட்ட மொ.தே. உற்பத்தி பெயரளவு நியதிகளில், 2013இன் 13.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் 13.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** முன்னைய ஆண்டுகளைப் போன்றே, செலுத்தப்பட்ட காரணி வருமானம் பெறப்பட்ட தேறிய காரணி வருமானத்தினை விஞ்சிக் காணப்பட்டமையினால் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாகவே தொடர்ந்தும் காணப்பட்டது. எனினும், மொ.உ.உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் மொ.தே. உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சிக்கு இவ்வாண்டுப் பகுதியில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் எதிர்க்கணிய வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே காரணமாகும். இதன்படி, 2014இல் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் 2013இல் பதிவு செய்யப்பட்ட 46.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 6.2 சதவீதத்தினால் மட்டும் வீழ்ச்சியடைந்தது. இதற்கு, ஒப்பீட்டு ரீதியில் இவ்வாண்டுப் பகுதியில் காரணி வருமானக் கொடுப்பனவுகளிலும் பார்க்க ஊழியர்களின் இழப்பீடு மற்றும் முதலீட்டு வருமானம் ஆகிய இரண்டினதும் காரணி வருமானத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியே காரணமாகும்.

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதம்




## 2.3 துறைவாரியான வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சினைகள்

### வேளாண்மை

**வேளாண்மைத் துறையானது ஆண்டுகாலப் பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளினால் 2013இன் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 0.3 சதவீத வளர்ச்சியுடன் மெதுவடைந்தது.** இதன் விளைவாக வேளாண்மைத் துறையின் பங்கு 2013இன் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பிலாக 10.8 சதவீதத்திலிருந்து 2014இல் 10.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது. தேயிலை துணைத்துறை நலிவடைந்த அதேவேளை நெல் மற்றும் இறப்பர் துணைத் துறைகள் பாரியளவில் சுருங்கியது. ஏனைய உணவுப் பயிர்கள், தெங்கு மற்றும் மீன்பிடி போன்ற துணைத்துறைகளிலான

சாதகமான விரிவாக்கமானது வேளாண்மைத் துறையின் வளர்ச்சியை நோக்கி சாதகமாகப் பங்களித்த அதேவேளை துணைத்துறைகளான சிறு ஏற்றுமதி பயிர்கள் மற்றும் ஏனைய வேளாண்மைப் பயிர்கள் ஆகிய இரண்டும் ஆண்டுகாலப் பகுதியில் சுருங்கின. நெல் துணைத்துறையின் வீழ்ச்சியானது சிறுபோக மற்றும் பெரும்போக உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஒன்றுசேர்ந்த விளைவாகும். ஏனைய உணவுப் பயிர்களின் துணைத்துறையிலான வளர்ச்சியின் பிரதான காரணியாக மேட்டு நிலப் பயிர்கள் மற்றும் காய்கறிகளின் சாதகமான வளர்ச்சி அமைந்தது. ஆண்டின் முதல் அரைப் பகுதியின் மட்டுப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் காரணமாக வேளாண்மையாளர்கள் நிரப்புப் பயிர்களுக்கு நகர்ந்தமையும் இதற்கு உதவியது. மேலதிகமாக தெங்கு துணைத் துறையில் ஏற்பட்ட கணிசமான மீட்சியும் வேளாண்மைத் துறைக்குள் அடங்கும் ஏனைய துறைகளில் ஏற்பட்ட எதிர்க்கணிய தாக்கத்தை தணித்தது. இதற்கிடையில் கால்நடை, பெருந்தோட்ட அபிவிருத்தி, விறகு மற்றும் காடாக்கல் போன்ற துணைத்துறைகளும் வேளாண்மைத் துறையின் வளர்ச்சியை நோக்கி சாதகமாக பங்களித்தது.

## நெல்

**2014இல் நெல் உற்பத்தி வரட்சியான வானிலை நிலைமைகள் காரணமாக 3.38 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 27 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** இது இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் சிறுபோக மற்றும் பெரும்போக காலங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளால் ஏற்பட்ட குறைந்த விளைச்சல் காரணமாக 2014இல் நெல் உற்பத்தி குறைவாக விளங்கியது. 2014இல் குறைந்த நெல் விளைச்சல் 2013இன் எக்டேயர் ஒன்றுக்கான 4,329 கி.கிறாமுடன் ஒப்பிடுகையில் எக்டேயர் ஒன்றுக்கு 4,264 கி.கிறாம்களாக விளங்கியதும் முன்னைய ஆண்டின் 1,067,338 எக்டேயர்களுடன் ஒப்பிடுகையில் 792,947 எக்டேயர்களுக்கு பயிரிடப்பட்ட பரப்பளவைக் குறைத்ததும் 2014இல் நெல் உற்பத்தியிலான வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. நெல் உற்பத்தியிலான 35.5 சதவீத வீழ்ச்சியுடன் மிகவும் பாதிக்கப்பட்ட பருவகாலமாக சிறுபோகம் விளங்குகையில் பெரும்போகம் 21.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இதனால், 2014இல் அரிசி உற்பத்தி 2.1 மில்லியன் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 2013இற்கான 2.9 மில்லியன் மெற்றிக் தொன்கள் கொண்ட மதிப்பிடப்பட்ட உற்பத்தியை விட 27.1 சதவீத வீழ்ச்சியாகும். 2014இல் அரிசி உற்பத்தியானது உள்நாட்டு நுகர்வின் 11 மாதங்களுக்கு மாத்திரமே பூர்த்தி செய்யப் போதுமானது. இதேவேளை, சிறுபோகத்தில் குறைந்த மட்டத்திலுள்ள நீர்த்தேக்கங்களிலுள்ள நீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் பொருட்டு நெல் பயிரிடும் நிலங்களில் குறைந்த நீர் தேவைப்படும் ஏனைய பயிர்களைப் பயிரிடுவதற்கு வேளாண்மையாளர்களை அரசு ஊக்கப்படுத்தியது.

**2014இல் நெல் வழங்கலிலான பற்றாக்குறை அரிசியின் சில்லறை விலைகளை அதிகரிக்கச் செய்ததுடன் அரசாங்கம் அரிசி விலைகளை உறுதிப்படுத்துவதற்கு வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில் இது இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் வழங்கலுடன் பூர்த்தி செய்யப்பட்டது.** 2014இல் திறந்த சந்தையில் நெல் விலைகள், நெல் கொள்வனவு திட்டத்தின் கீழ் கொள்வனவுக்காக அரசால் குறித்துரைக்கப்பட்ட நெல்லின் உத்தரவாதமளிக்கப்பட்ட விலையை விட தொடர்ந்து அதிகரித்துக் காணப்பட்டது. நெல் விலைகளிலான அதிகரிப்புடன் இணங்கிச் செல்லும் விதத்தில் கூடுதலாகப் பயன்படுத்தப்படும்


அட்டவணை 2.2 **நெல் துறை புள்ளிவிபரங்கள்**

| விடயம் | அலகு | 2013 (அ) | | | 2014 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 780 | 448 | 1,227 | 651 | 313 | 964 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 742 | 447 | 1,188 | 580 | 301 | 881 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 665 | 403 | 1,067 | 521 | 272 | 793 |
| உற்பத்தி | '000 மெ.தொ | 2,846 | 1,774 | 4,621 | 2,236 | 1,145 | 3,381 |
| | '000 புசல்கள் | 136,393 | 85,042 | 221,435 | 107,155 | 54,872 | 162,027 |
| விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 4,281 | 4,408 | 4,329 | 4,222 | 4,204 | 4,264 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 3,444 | 1,880 | 5,324 | 3,122 | 1,414 | 4,537 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 23 | - | - | 600 |
| நெல்லிற்குச் சமமான இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 33 | - | - | 858 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்ற அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.2 அரிசி: நிரம்பல் மற்றும் கேள்வி




சம்பா மற்றும் நாட்டரிசியின் சராசரி சில்லறை விலைகள் 2014இல் முறையே 16.3 சதவீதத்தாலும் 27.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. இதனால், அரசாங்கம் அரிசி விலைகளிலான அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பல வழிமுறைகளை ஆரம்பித்தது. இவை அரிசி இறக்குமதிகள் மீதான தீர்வையின் குறைப்பு மற்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் அரிசியின் மேலதிக இருப்பைப் பேணுவதை உள்ளடக்குகின்றன. இதன்படி, 2014இல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீதான பயனுறுதியான தீர்வை வீதம் கி.கி ஒன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கி ஒன்றுக்கு ரூ.1 இற்குக் குறைக்கப்பட்டதால் 2014இல் மொத்த அரிசி இறக்குமதிகள் 2013இன் தொடர்பான காலப்பகுதியின் 23,000 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 600,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன. அரிசி இறக்குமதிகள் வீட்டுத்துறை நுகர்வு மற்றும் கைத்தொழில் பாவனை என்பவற்றிற்கான கிடைக்கத்தக்க அரிசியின் உள்ளூர் வழங்கலை துணை நிரப்பியது.

## தேயிலை

**உயர் தேயிலை விலைகள் மற்றும் ஏறத்தாழ சாதனைமிக்க உற்பத்தி அளவு மட்டத்தால் ஆதரவளிக்கப்பட்டு தேயிலை உற்பத்தி 2014இல் சிறப்பாகச் செயலாற்றியது.** 2014இல் தேயிலை உற்பத்தி 338 மில்லியன் கி.கிறாமாக விளங்கியதுடன், இது தேயிலைக் கைத்தொழிலின் வரலாற்றில் 2013இல் வரலாற்று ரீதியாக பதிவு செய்யப்பட்ட 340 மில்லியன் கி.கி கொண்ட ஆகக்கூடிய அளவைவிட சிறிதளவு மட்டுமே குறைவானதாகும். மொத்த உற்பத்தியில் 62.1 சதவீதத்துக்கு வகைகூறும் தாழ்நிலத் தேயிலை உற்பத்தியின் அளவு 2014இல் 210 மில்லியன் கி.கிறாம்களுக்கு 0.8 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் உயர்நில மற்றும் மத்திய நிலத் தேயிலையின் உற்பத்தி முறையே 0.4 சதவீதத்தாலும் 6.4 சதவீதத்தாலும் 78.9 மில்லியன் கி.கிறாம்களுக்கு 49.2 மில்லியன் கி.கிறாம்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. தேயிலையின் உற்பத்தியைப் பாதித்த காலநிலைத் தடுமாற்றங்களுக்கு மத்தியிலும் 2014இல் பாரிய அளவிலான தேயிலை உற்பத்தி பதிவு செய்யப்பட்டது. அனைத்து நிலத் தேயிலை உற்பத்தி வரட்சி நிலைமைகள் காரணமாக இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் வீழ்ச்சியடைந்தது. எனினும், நடுத்தர நிலத் தேயிலையின் உற்பத்தி மூன்றாம் காலாண்டில் உயர்நில மற்றும் தாழ்நிலத் தேயிலையின் கணிசமான அதிகரிப்பால் அளவுக்கும் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தது. தாழ்நிலத் தேயிலை உடமைகளிலிருந்து பாரியளவில் பெறப்பட்ட தேசிய தேயிலை உற்பத்தியில் சிறு உடமையாளர்களின் பங்கானது, ஒப்பீட்டளவில் தேயிலைக் கொழுந்தின் உயர் விலைகளின் உதவியினால் 2013இன் 72.1 சதவீதத்திலிருந்து 2014இல் 73.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**2014இல் ஆண்டின் இறுதிக் காலாண்டினைத் தவிர, கொழும்புத் தேயிலை ஏலத்தில் தேயிலையின் விலையானது செழிப்பான மட்டத்தில் காணப்பட்டது.** முதலாம் காலாண்டில் மரபுவழி கறுப்புத் தேயிலையில் உலகளாவிய வழங்கல் பற்றாக்குறையும் இரண்டாம் காலாண்டில் மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதிக் கேள்வி போன்ற முக்கிய காரணங்களினால் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் ஒப்பீட்டளவில் உயர் தேயிலை விலைகள் காணப்பட்டன. 2014இல் சராசரி தேயிலை விலையானது 2013இல் கி.கி ஒன்று ரூ.444.42 இலிருந்து கி.கி ஒன்று ரூ.461.86 இற்கு அதிகரிக்கப்பட்டது. தேயிலையின் கப்பல் ஏற்றுப் பெறுமதி சராசரி விலை 2013இல் கி.கி ஒன்று ரூ.623.91 இலிருந்து கி.கி ஒன்று ரூ.649.44 இற்கு 4.1 சதவீதத்தால் அதிகரித்தது. கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலை விலைகளிலான ஆகக் கூடிய அதிகரிப்பு தாழ்நிலத் தேயிலையிலும் (3.2 சதவீதம்), அதைத் தொடர்ந்து உயர் நிலத் தேயிலையிலும் (3.0 சதவீதம்) பதிவு செய்யப்பட்டது. எனினும், நடுத்தர நிலத் தேயிலையின் சராசரி விலை 2.4 சதவீதம் கொண்ட சிறிய வீழ்ச்சியைக் காட்டியது. தேயிலைக் கொழுந்திற்காக தேயிலை சிறு உடைமையாளர்களால் பெறப்பட்ட சராசரி விலை 2013இன் கி.கிறாம் ஒன்றுக்கான ரூ 65இலிருந்து 2014இல் கி.கிறாம் ஒன்றுக்கு ரூ.68 இற்கு அதிகரித்தது. இதேவேளை, ருசியா மற்றும் மத்திய கிழக்கிலான பூகோள அரசியல் பதற்றங்களில் ஏற்பட்ட மெதுவடைந்த கேள்வி மற்றும் விதிக்கப்பட்ட தடைகளால் தோன்றும் ருசியப் பொருளாதாரத்திலான மெதுவடைவு மற்றம் பன்னாட்டுப் பெற்றோலிய விலைகளிலான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியால் தேயிலை விலைகள் 2014 ஒகத்திலிருந்து வீழ்ச்சியடையத் தொடங்கின.

## இறப்பர்

**பாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் நலிவடைந்த பன்னாட்டு விலைகள் காரணமாக இறப்பர் உற்பத்தி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக வீழ்ச்சியடைந்தது. இறப்பர் உற்பத்தி 2013இன் 130,420 மெற்றிக் தொன்களிலிருந்து 2014இல் 98,573 மெற்றிக் தொன்களுக்கு 24.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** இறப்பர் உற்பத்தியிலான வீழ்ச்சி இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய தொடர்ச்சியான வரண்ட வானிலை நிலைமைகள் மற்றும் லேற்ரெக்ஸ் பால் எடுத்தலை மூன்றாம் காலாண்டில் பெய்த பலத்த மழை தடுப்பி காரணமாக ஏற்பட்டது. மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவீதத்துக்கு வகைகூறும் தட்டை இறப்பரின் உற்பத்தி 48,539 மெற்றிக் தொன்களுக்கு 22.7 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்திருக்கையில் மொத்த இறப்பர் உற்பத்தியில் 12.0 சதவீதத்துக்கு வகை கூறும் லேற்ரெக்ஸ் கிறெப்பின் உற்பத்தி 2014இல் 11,832 மெற்றிக் தொன்களுக்கு 23.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்திப் பற்றாக்குறை மற்றும் பன்னாட்டுச் சந்தையிலான குறைந்த விலைகள் உள்ளூர் இறப்பர் உற்பத்தித் தயாரிப்பாளர்களை இறக்குமதி செய்யப்பட்ட இறப்பரில் தங்கியிருப்பதற்கு வழியமைத்தது. இறப்பரின் இறக்குமதி 2013இன் 11,150 மெற்றிக் தொன்களிலிருந்து 2014இல் 29,220 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. மேலும், இறப்பர் விலைகளிலான வீழ்ச்சியால் பாதிப்படைந்த இறப்பர் சிறு உடைமையாளர்கள் பாலெடுத்தல் தொழிற்பாடுகளை மெதுவாக்கியதுடன் மொத்த இறப்பர் உற்பத்தியில் சிறு உடமையாளர்களின் பங்கைக் குறைத்தது.

**உலக இயற்கை இறப்பரின் விலைகள் 2014இல் கூர்மையான வீழச்சியைக் காட்டி உலகக் கேள்வியிலான மெதுவடைவையும் நுகர்வு நாடுகளில் காணப்படும் பாரிய தாங்கியிருப்புக்களையும் பிரதிபலித்தன.** உலக சந்தையில் இயற்கை இறப்பரின் சராசரி விலை 2013இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,795 இலிருந்து 2014இல் ஐ.அ.டொலர் 1,956 இற்கு 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இயற்கை இறப்பருக்கான உலகக் கேள்வியில் 95 சதவீதத்தை வழங்கும் ஆசியாவில் இயற்கை இறப்பர் உற்பத்தி 2014இல் 10.8 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கையில் சீனா மற்றும் ஜப்பானில் தாங்கிருப்புக்கள் அதிகரித்தன. இதேவேளை, நலிவடைந்து வரும் மசகெண்ணெய் விலைகள் செயற்கை இறப்பருக்கான கேள்வியை அதிகரித்து இயற்கை இறப்பர் விலைகள் மீது மேலும் கீழ்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இயற்கை இறப்பர் விலைகளிலான வீழ்ச்சி பிரதான உற்பத்தி செய்யும் நாடுகளிலுள்ள சிறு உடமையாளர்கள் ஏனைய பயிர்களுக்கு மாறுவதாலோ அல்லது ஏனைய வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு நகர்வதாலோ உற்பத்தி குறைவடைவதற்கு வழியமைக்கிறது. பன்னாட்டுப் அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில் கொழும்பு இறப்பர் ஏலங்களில் இறப்பர் விலைகளும் 2014இன் ஆகக் குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்து அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைத் தொடர்ந்தது. 24.1 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய வீழ்ச்சி சுருட்டிப் புகையூட்டப்பட்ட தட்டை I இறப்பரில் காணப்படுகையில் லேற்ரெக்ஸ் கிறேப் IX மற்றும் கழிவு இறப்பர் விலைகள் 2014இல் முறையே 22.0 சதவீதத்தாலும் 22.4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடந்தன.

**அட்டவணை 2.3**
**வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100) (அ)**

| விடயம் | 2013 (ஆ) | 2014 (இ) | மாற்றம் (%) 2013/2014 |
|---|---|---|---|
| வேளாண்மை, மீன்பிடி | 121.9 | 118.6 | -2.7 |
| 1 வேளாண்மை | 115.2 | 109.8 | -4.7 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 112.9 | 106.3 | -5.9 |
| தேயிலை | 109.1 | 108.5 | -0.6 |
| இறப்பர் | 97.2 | 73.5 | -24.4 |
| தெங்கு | 88.7 | 101.3 | 14.2 |
| நெல் | 123.6 | 90.4 | -26.8 |
| ஏனைய பயிர்கள் | 125.4 | 133.0 | 6.1 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 132.1 | 136.5 | 3.4 |
| 2 மீன்பிடி | 153.7 | 160.4 | 4.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) வருடாந்த உற்பத்தி சுட்டெண்ணின் அடிப்படை பெறுமதிக்காக பாவிக்கப்பட்ட சராசரிப் பெறுமதிகள் 1997-2000 இலிருந்து 2007-2010 இற்கு மாற்றப்பட்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

## தெங்கு

**தெங்குக் கைத்தொழில் 2013இல் பிரதான தெங்கு பயிரிடும் பிரதேசங்களில் நிலவிய கூடிய மழைவீழ்ச்சியால் நன்மையடைந்து 2014இல் அதன் வளர்ச்சி விசையைப் மீளப்பெற்றது.** தெங்கு உற்பத்திக்காக முன்னைய ஆண்டில் நிலவிய சிறந்த வானிலை நிலைமைகளின் காலம் தாழ்த்திய விளைவால் உதவப்பட்டு 2014இல் தெங்கு உற்பத்தி 2,870 மில்லியன் காய்களுக்கு 14.2 சதவீதத்தால் அதிகரித்தது. 2014இல் தேங்காய்த்துருவலின் உற்பத்தி 2013இன் 29,198 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 50,367 மெற்றிக் தொன்களுக்கு 72.5 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதேவேளை, தேங்காய் களி, தேங்காய் பால்மா மற்றும் தேங்காய் பால் உற்பத்தி 2014இல் 24,708 மெற்றிக் தொன்களுக்கு 24.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து இப்பொருட்களுக்கான உயர் ஏற்றுமதிக் கேள்வியைப் பிரதிபலிக்கிறது. எனினும், தேங்காய்த் துருவல் உற்பத்தியாளர்கள் போன்ற ஏனைய கைத்தொழிலாளர்களிடமிருந்து தேங்காய்கான அதிகரித்த கேள்வி காரணமாக தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள காய்கள் 2014இல் 318 மில்லியன்

காய்களுக்கு 8.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, தேங்காய் எண்ணெய்க்கு நெருங்கிய பதிலீடான தாவர எண்ணெயின் இறக்குமதிகள் உள்ளூர் தேங்காய் எண்ணெயின் குறைந்த உற்பத்தி மற்றும் உலகளாவிய தாவர எண்ணெய் விலைகளிலான வீழ்ச்சியால் உதவப்பட்டு 2014இல் 141,993 மெற்றிக் தொன்களுக்கு 57.8 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வாண்டில் பல எண்ணிக்கையான எண்ணெய் ஆலைகள் நவீனமயப்படுத்தப்பட்டதுடன் உயர் ஏற்றுமதிக் கேள்வியினால் ஆதரவளிக்கப்பட்டு தூய்மையான தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்வதற்கு புதிய ஆலைகள் நிறுவப்பட்டன. 2014இல் தூய்மையான தேங்காய் எண்ணெயின் ஏற்றுதி 2013இன் 2,101 மெ.தொன்களிலிருந்து 7,278 மெ.தொன்களுக்கு அதிகரிக்கப்பட்டது.

**2014இல் தெங்கு விலைகள் அதிகரித்து தெங்கு உற்பத்திகளின் உள்ளூர் தயாரிப்பாளர்களிடமிருந்தான உயர் கேள்வி மற்றும் உலக சந்தையில் வழங்கல் பற்றாக்குறைக்கு மத்தியில் அதிகரித்த ஏற்றுமதிக் கேள்வியைப் பிரதிபலிக்கிறது.** தெங்குக்கான உயர் கேள்வி காயின் சராசரிப் பண்ணை விலையை 2013இன் காய் ஒன்றுக்கான ரூ.31 இலிருந்து 2014இல் காய் ஒன்றுக்கு ரூ.32 இற்கு அதிகரித்தது. உயர் பண்ணை விலைகளும் தேங்காயின் சில்லறை விலை அதிகரிப்புக்கு இட்டுச் சென்றதுடன் தேங்காய்த்துருவல் தேங்காய் எண்ணெய் மற்றும் ஏனைய தெங்கு உள்ளீட்டுப் பொருட்களின் உற்பத்திச் செலவையும் அதிகரிக்கச் செய்தது. தேங்காயின் சராசரிச் சில்லறை விலை 2013இன் காய் ஒன்றுக்கான ரூ.43.20 இலிருந்து 2014இல் காய் ஒன்றுக்கு ரூ.45.60 இற்கு அதிகரித்த வேளையில் தேங்காய் எண்ணெயின் சராசரி விலை 2013இன் லீற்றர் ஒன்றுக்கான ரூ.259 இலிருந்து 2014இல் லீற்றர் ஒன்றுக்கு ரூ.282 இற்கு உயர்ந்தது. தேங்காய்த் துருவலின் சராசரி விலை 2013இன் கி.கி ஒன்றுக்கான ரூ.239 இலிருந்து 2014இல் கி.கிறாம் ஒன்றுக்கு ரூ.297 இற்கு அதிகரித்தது. இதேவேளை, 2014இல் தேங்காய் துருவல் ஏற்றுமதிகள் ஏறத்தாழ 73 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து தேங்காய்த் துருவலின் மிகப்பெரிய உலக வழங்குனரான பிலிப்பைன்சிலான வழங்கல் பற்றாக்குறைக்கு மத்தியிலும் அதிகரித்த உலகளாவிய கேள்வியைப் பிரதிபலித்தது.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள் முக்கிய பயிரிடும் பிரதேசங்களில் காணப்பட்ட வரட்சி நிலைமைகள் காரணமாக மோசமாகச் செயலாற்றின. மிளகு, சாதிக்காய், கராம்பு, புல்லெண்ணெய் மற்றும் பாக்கின் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருக்கையில் கறுவா, கொக்கோ, ஏலக்காய் மற்றும் வெற்றிலை உற்பத்தி சிறிதளவால் வளர்ச்சியடைந்தன.** பூக்கும் காலம் மற்றும் பழுக்கும் பருவகாலங்களில் தொடர்ச்சியான வரட்சியால் மோசமாக பாதிக்கப்பட்ட குறைவடைந்த மிளகு அறுவடை மிளகின் ஏற்றுமதிகளைப் பாதித்திருக்கையில் மிளகு விலைகள் அதிகரித்து இவ்வாண்டில் உயர் கேள்வியைப் பிரதிபலித்தது. இதேவேளை, கராம்பு உற்பத்தியிலான வீழ்ச்சி ஒன்றுவிட்ட ஓராண்டு அபரிமித அறுவடையை உற்பத்தி செய்யும் சுற்றுவட்ட அறுவடை மாதிரி காரணமாக ஏற்பட்டது. கராம்பின் விலைகளும்

### அட்டவணை 2.4 முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகைகள் | அலகு | 2013(அ) | 2014(ஆ) |
|---|---|---|---|
| **1. தேயிலை** | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 340.0 | 338.0 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 184 | 185 |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 422.70 | 433.97 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 444.42 | 461.86 |
| - ஏற்றுமதிகள் (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 623.91 | 649.44 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,591 | 1,195 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 263 | 401 |
| 1.8 மொ.உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.9 | 0.9 |
| **2. இறப்பர்** | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 130.4 | 98.6 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 134 | 134 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 105 | 111 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 150.00 | 160.00 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 376.78 | 285.76 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 389.91 | 362.96 |
| 2.6 மீள்நடுகை (எ) | எக்டேயர்கள் | 2,024 | 1,475 |
| 2.7 புதிய பயிரிடுகை (எ) | எக்டேயர்கள் | 2,979 | 1,304 |
| 2.8 மொ.உ.உயின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.2 | 0.1 |
| **3. தெங்கு** | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,513 | 2,870 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 392 | 418 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 13.58 | 13.67 |
| 3.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 29.59 | 31.51 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஏ) | காய்க்கு ரூபா | 29.36 | 38.91 |
| 3.5 மீள்நடுகை / கீழ்பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 4,541 | 5,796 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஒ) | எக்டேயர்கள் | 23,668 | 30,771 |
| 3.7 மொ. உ.உ.வின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.8 | 0.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஒ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு ஹெக்டெயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டில் சார்புரீதியில் தொடர்ந்து உயர்வாகக் காணப்பட்டன. எனினும், மரமுந்திரி உற்பத்தி அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவடைந்த பரப்பளவால் உதவப்பட்டு குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தது. பாக்குகளுக்கான கேள்வி குறிப்பாக இந்தியாவிலிருந்தான உயர் ஏற்றுமதிக் கேள்வி காரணமாக கணிசமானளவில் அதிகரித்ததுடன் இவ்வாண்டில் பாக்கு விலைகளில் அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதேவேளை, கோப்பி உற்பத்தி இவ்வாண்டில் மாற்றமின்றி தொடர்ந்து விளங்கியது.

### ஏனைய களப் பயிர்கள்

**ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி இலாபகரமான விலைகள் மற்றும் அத்தகைய பொருட்களின் உள்நாட்டு வழங்கலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட அரச கொள்கைகளால் உதவப்பட்டு 2014இல் அதிகரித்தது.** ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி 2013/14 பெரும்போகத்தில் உற்பத்தியில் ஏற்பட்ட 11.4 சதவீத அதிகரிப்பு மற்றும் 2014 சிறுபோகத்தில் ஏற்பட்ட 0.6 சதவீத வளர்ச்சி என்வற்றின் இணைந்த விளைவால் 1,035, 012 மெற்றிக் தொன்களுக்கு 7.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பயிர்ச்செய்கைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட நீரின் அளவைச் சேமிப்பதற்கான ஒரு முயற்சியாக வேளாண்மையாளர்கள் அவர்களது நெல் நிலங்களை ஏனைய களப்பயிர்களின் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தினர். இப்பயிர்களுக்காக கிடைக்கப்பெற்ற இலாபகரமான விலைகள் அத்தகைய பொருட்களின் இறக்குமதிகள் மீது வழங்கப்பட்ட உயர்ந்த சிறப்புப் பண்டத் தீர்வையால் உதவப்பட்டு உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க உதவியது. இதனால் சோளம், குரக்கன், உழுந்து, எள்ளு, மரவள்ளி, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் மற்றும் கடுகின் உற்பத்தி அதிகரித்த போதிலும் இறங்கு, சோயா அவரை, நிலக்கடலை மற்றும் வத்தாளைக்கிழங்கு உற்பத்தியில் வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இத்துடன், அரசாங்கம் இப்பயிர்களின் உள்ளூர் உற்பத்தி சுய தேவை மட்டங்களை அடைவதற்கு தொடர்ந்து ஊக்கமளித்தது. இதன்படி சோளம், நிலக்கடலை, எள்ளு மற்றும் தட்டைப் பயறு உற்பத்தி 2014இல் மதிப்பிடப்பட்ட உள்ளூர் வேள்வியை விஞ்சியது. விதைகளை சலுகை விலையில் வழங்குதல் மற்றும் முன்னேறிய விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற வழிமுறைகளூடாக பெரிய வெங்காயச் செய்கையை நாட்டின் பல பிரதேசங்களில் விரிவாக்குவதை நோக்காகக் கொண்ட அரசாங்கக் கொள்கைகளால் வழிநடத்தப்பட்ட பெரிய வெங்காய உற்பத்தி 2014இல் 101,166 மெற்றிக் தொன்களுக்கு 45.3 சதவீதத்தால் அதிகரித்தது. இதனால், பெரிய வெங்காயத்தின் இறக்குமதி 2013இன் 168,900 மெற்றிக் தொன்களிலிருந்து 2014இல் 150,530 மெ.தொன்களுக்கு ஏறத்தாழ 10.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

### காய்கறிகள்

**காய்கறி உற்பத்தி 2014இல் 1,279,155 மெற்றிக் தொன்களுக்கு 7 சதவீதத்தால் அதிகரித்தது.** 2014இல் காய்கறி உற்பத்தியிலான வளர்ச்சி 2013/ 14 பெரும்போகத்தில் உற்பத்தியிலான 7.9 சதவீத அதிகரிப்பு மற்றும் 2014 சிறுபோகத்தில் 6.1 சதவீத வளர்ச்சியால் உதவப்பட்டது. காய்கறி விலைகள் 2014 சனவரியிலிருந்து ஏப்பிறல் வரை தொடங்கும் பெரும்போக அறுவடை காலப்பகுதியில் முன்னேற்றமடைந்த வழங்கலுடன் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. எனினும், நீர் பற்றாக்குறை மற்றும் வரட்சி நிலைமைகள் காரணமாக சிறுபோக பயிர்ச் செய்கையிலான தாமதம் காரணமாக மாச்சில் (நெல் அறுவடைக்குப் பின்பு) காய்கறியின் இடையீட்டுப் பருவகால பயிர்ச்செய்கை பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்படாததால் காய்கறி வழங்கல் 2014 ஏப்பிறல் நடுப்பகுதி அளவில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. காய்கறிகளின் குறைந்த வழங்கல் 2014 மேயிலிருந்து யூலை நடுப்பகுதி வரை விலைகளின் கணிசமான அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. எனினும், சிறுபோக அறுவடையின் வழங்கல் சந்தைக்கு வந்ததும் விலைகள் யூலை நடுப்பகுதியிலிருந்து வீழ்ச்சியடைந்தன. இதேவேளை, இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட பாரிய மழை வீழ்ச்சி மற்றும் வெள்ளம் பலத்த பயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியமையால் சந்தையில் காய்கறிகளின் வழங்கலிக் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியையும் 2014 திசெம்பரிலிருந்து 2015 சனவரி வரையான மாதங்களில் காய்கறி விலைகளில் ஒருங்கிணைந்த அதிகரிப்பையும் ஏற்படுத்தியது.

### சீனி

**பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் சீனி உற்பத்தியில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்நாட்டு சீனி உற்பத்தி மெதுவடைந்தது.** இதன் விளைவாக, 2014இல் மொத்த சீனி உற்பத்தி 52,342 மெற்றிக் தொன்களுக்கு 1.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சீனி உற்பத்தி மூன்று தொழிற்சாலைகளில் (பல்வத்தை, செவனகல மற்றும் கல்லோயா) இடம்பெற்றிருக்கையில் 2014இல் தொழிற்பாட்டில் இல்லாத கந்தளாய் தொழிற்சாலை எதிர்காலத்தில் தொழிற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் கரும்புப் பயிர்ச் செய்கையை தொடர்ந்து மேற்கொண்டது. பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் உயர் விளைச்சல் வகைகளின் பயன்பாடு என்பவற்றால் உதவப்பட்ட தனிப்பட்ட கரும்பு பயிரிடுவோரின் கரும்பு வழங்கல் முன்னேறியமையால் கல்ஓயா தொழிற்சாலையில் (முன்பு ஹிங்குரான தொழிற்சாலை) உற்பத்தி 19,961 மெற்றிக் தொன்களுக்கு 90 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டு சீனிக் கைத்தொழிலுக்காக கரும்பு பயிரிடும் வேளாண்மையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு

சீனித் தொழிற்சாலைகளால் ஒரு மெற்றிக் தொன் கரும்புக்கு ரூ.4,000 - 4,200 கொண்ட உயர்விலை வழங்கப்பட்டுள்ளது. எனினும், மழைவீழ்ச்சியால் கரும்பு வழங்கும் பெலவத்தைத் தொழிற்சாலையிலான உற்பத்தி இவ்வாண்டில் நிலவிய வரட்சி நிலைமைகளின் முக்கிய காரணத்தால் 17,964 மெற்றிக் தொண்களுக்கு 36.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, செவனகல தொழிற்சாலையில் உற்பத்தி 2013இல் உற்பத்தி செய்யப்பட்ட 14,190 மெதொன்களுடன் ஒப்பிடுகையில் 14,417 மெ.தொன்களில் சிறிதளவில் உயர்ந்து விளங்கியது. சீனி உற்பத்தி இவ்வாண்டில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதிலும் 2014இல் உள்நாட்டு சீனி உற்பத்தியாளர்கள் நாட்டின் சீனித் தேவையை 2013இன் 8.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9.2 சதவீதத்தை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

### மீன்பிடி

**2014இல் மீன்பிடித்துறை மிதமளவில் விரிவடைந்தது.** கடல் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட 3.0 சதவீத அதிகரிப்பு மற்றும் நன்னீர் மீன்பிடியில் ஏற்பட்ட 13.2 சதவீத அதிகரிப்பால் உதவப்பட்டு 2014இல் மீன் உற்பத்தி 535,050 மெற்றிக் தொன்களுக்கு 4.3 சதவீதத்தால் அதிகரித்தது. கடல் மீன் உற்பத்தியில் கரை கடந்த துறை 1.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் ஏரி மீன்பிடியை உள்ளடக்கும் கரையோர மீன் உற்பத்தி 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கரைகடந்த மீன் உற்பத்தியிலான எதிர்பாக்கப்பட்டதை விடக் குறைந்த வளர்ச்சி பெரும்பாலும் கடலில் மீன்பிடிச் செயற்பாட்டைக் குறைத்த கால நிலைமைகளால் ஏற்பட்டது. இதன் விளைவாக மொத்த கடல்மீன் உற்பத்தியில் ஆழ்கடல் மீன் உற்பத்தியின் பங்கு 2013இன் 40 சதவீதத்திலிருந்து 2014இல் 39 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. எனவே, கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு முழுவதும் பெரிய மீன் வகைகளின் விலைகள் தொடர்ந்தும் உயர்ந்து விளங்கின. எனினும், சிறிய மீனின் விலைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து குறைவாக விளங்கி கரையோர மற்றும் ஏரி மீன்பிடிகளில் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. நன்னீர் மீன்பிடித் துறையில் நன்னீர் மீன்பிடி ஏறத்தாழ 25 சதவீதத்தாலும் இறால் உற்பத்தி 16.3 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் அலங்கார மீன்பிடி 76.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டின் பின்னரைப்பகுதியில் வரட்சி நிலைமைகள் நன்னீர் மீன் உற்பத்தியைப் பாதித்தமையால் நன்னீர் மீன் உற்பத்தி பெரும்பாலும் இவ்வாண்டின் முதலரைப் பகுதியிலேயே இடம்பெற்றது. இதேவேளை, தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் சராசரி நாளாந்த உற்பத்தி 2013இன் நாளொன்றுக்கான 12,150 தகரத்திலடைக்கப்பட்ட மீனிலிருந்து 14,200 தகரத்திலடைக்கப்பட்ட மீனுக்கு 16.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் இறக்குமதிகள் 2013இன் 21,835 மெற்றிக் தொன்களிலிருந்து 2014இல் 18,591 மெற்றிக் தொன்களுக்கு 14.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 2.5 மீன் உற்பத்தி**

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2013 (அ) | 2014 (ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 446 | 459 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 67 | 76 |
| மொத்தம் | 513 | 535 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலம் : கடற்றொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

### கால்நடை

**பால் உற்பத்தி 2014இல் 330 மில்லியன் லீற்றர்களுக்கு 1.1 சதவீதத்தால் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது.** பசுப்பால் உற்பத்தி 273 மில்லியன் லீற்றர்களுக்கு 2.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் எருமைப்பால் உற்பத்தி 60 மில்லியன் லீற்றருக்கு 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வரட்சி நிலைமை மற்றும் பாதவாய் நோய்களின் பரவல்களினால் இவ்வாண்டு காலப்பகுதியில் பால் உற்பத்தியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, பால் கறக்கும் பசுக்களின் எண்ணிக்கை 384,280இற்கு 6.0 சதவீதத்தினால் குறைந்ததுடன் இதில் பால் கறக்கும் எருமைகள் 90,460இற்கு 12.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் குறைந்தது. எனினும், பதனிடப்படாத பாலுக்கான சாதகமான உற்பத்தியாளர் விலைகள், உள்நாட்டு பால் பொருட்களுக்கு சாதகமான நகர்ந்த நுகர்வோர் கேள்வி மற்றும் பாரியளவு பால் சேகரிப்பாளரிடமிருந்தான பதனிடப்படாத பாலுக்கான வளர்ந்துவரும் கேள்வி என்பன தேசிய கால் நடைத்துறை முதன்மைத் திட்டத்தின் கீழ் நிர்ணியக்கப்பட்ட இலக்குகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் உள்நாட்டு பால் உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கினைத் தொடர்வதற்குத் தூண்டுதல் வழங்கின. பாரிய சேகரிப்பாளர்களினது பால் சேகரிப்பு 2014இல் 202 மில்லியன் லீற்றருக்கு 0.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, உயர் விளைவினைக் கொண்ட பசுக்களின் இறக்குமதி அதிகரிப்பினால், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பால் உற்பத்தி 2013இன் 8.7 மில்லியன் லீற்றிலிருந்து 2014இல் 10 மில்லியன் லீற்றருக்கு அதிகரித்தது. தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,000 பசுக்களை அவுத்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்ததுடன் இவை பதனிடப்படாத பாலின் கைத்தொழில் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கும் உதவின.

**அட்டவணை 2.6**
**கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்**

| துணைத்துறை | 2013(அ) | 2014(ஆ) |
|---|---|---|
| 1. தேசிய விலங்கு (எண்ணிக்கை) (மில்) | 1.6 | 1.4 |
| கறவைப் பசுக்கள் | 1.2 | 1.1 |
| எருமைகள் | 0.4 | 0.3 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 329.2 | 332.9 |
| பசும்பால் | 265.2 | 272.7 |
| எருமைப்பால் | 64.0 | 60.2 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 37.0 | 42.0 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 59.9 | 58.7 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,636.8 | 1,741.4 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி('000 மெ.தொ) | 144.5 | 151.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு

**கோழிப்பண்ணைத் துறை 2014இல் தொடர்ந்து வளர்ச்சி அடைந்தது.** முட்டை உற்பத்தி 2014இல் 1,741 மில்லியனுக்கு 6.4 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் கோழி இறைச்சி உற்பத்தியும் 150,980 மெற்றிக் தொன்களுக்கு 4.5 சதவீதத்தால் அதிகரித்தது. சந்தையில் முட்டை வழங்கலின் அதிகரிப்பானது முட்டையின் சராசரி சில்லறை விலைகள் 2013இன் ரூ.14.06 இலிருந்து 2014இல் ரூ.12.80 இற்கு வீழ்ச்சியடையக் காரணமாகியது. அதேவேளை, அதிகரிக்கப்பட்ட கோழி உற்பத்தியானது அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளினால் ஊக்கமளிக்கப்பட்ட நாட்டின் பாரிய கோழி உற்பத்தியாளர்களின் பங்களிப்பின் அதிகரிப்பினால் ஏற்பட்டது. கோழி உற்பத்தியின் அதிகரிப்பிற்கிடையிலும், 2014இல் கோழிகளின் விலைகள் 2013 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்துக் காணப்பட்டது. இது ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட உயர் விலங்குத்தீனிகளின் அதிகரிப்பினால் அதிகரிக்கப்பட்ட உற்பத்திச் செலவினால் ஏற்பட்டது.

## காடாக்கல்

**இலங்கையின் காட்டின் அளவு 2014இல் வீழ்ச்சியடைந்தது.** 2014இல் மரத்தண்டு பிரித்தெடுப்பதற்காக 1,611 எக்டேயர் காடு அழிக்கப்பட்டிருக்கையில் 904 எக்டேயர் மீள்காடாக்கல் செய்யப்பட்டது. அரசாங்கம் 2020 அளவில் மொத்த நிலப்பரப்பின் 35 சதவீதம் வரை காட்டின் அளவை அதிகரிக்க உத்தேசித்துள்ளது. இதன்படி, வனத் திணைக்களத் 2014இல் காட்டை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது.

## வேளாண்மைக் கொள்கைகளும் நிறுவன ரீதியிலான உதவியும்

**இலங்கை தேயிலைச் சபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை 2014இல் தேயிலைத் துறையின் அபிவிருத்திக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டது.** தேயிலை மீள்நடுகை மற்றும் புதிய உதவுதொகை திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் ஏறத்தாழ ரூ.339 மில்லியன் செலவில் ஏறத்தாழ 1,309 எக்டேயர்கள் மீள்நடுகை செய்யப்பட்டன. புதிதாக நடப்பட்டன. இதன்படி கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் மொத்தமாக 6,239 எக்டேயர்கள் மீள்நடுகை செய்யப்பட்டன/ புதிதாக நடப்பட்டன. இது நாட்டின் தேயிலை பயிரிடப்படும் மொத்த பிரதேசத்தின் 3.4 சதவீதத்துக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மேலும், தொழிற்சாலை நவீனமயமாக்கல் உதவு தொகைத் திட்டத்தின் கீழ் 2014இல் 15 தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கப்பட்டதுடன் இலங்கையில் தொழிற்படும் மொத்தம் 713 தேயிலைத் தொழிற்சாலைகளில் 2007 இலிருந்து இத்திட்டத்தின் கீழ் 246 வரையான மொத்த எண்ணிக்கையைக் கொண்ட தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கப்பட்டன. நவீனமயப்படுத்தல் செயல்முறை தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் சிறந்த தயாரிப்பு நடைமுறைகளை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதால் தேயிலையின் தரத்தைப் பேணவும் தேயிலையின் தேறிய விற்பனை சராசரி விலைகளை அதிகரிக்கவும் உதவும். இத்துடன், இலங்கை தேயிலைச் சபை 2010இல் “தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல்” இற்காக நிதியம் ஒன்றை நிறுவியதுடன் தேயிலை ஏற்றுமதிகள் மீதான சிறப்புத் தீர்வையூடாக நிதியங்கள் திரட்டப்பட்டன. 2014இல் ஏறத்தாழ ரூ.1,158 மில்லியன் திரட்டப்பட்டதுடன் ரூ.800 மில்லியன் இலங்கைத் தேயிலையின் உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்தப்பட்டது. அத்தகைய ஊக்குவிப்புச் செயற்பாடுகளின் நன்மைகள் இலங்கைத் தேயிலைக்கான மிகை விலைகளிலும் அதிகரித்த ஏற்றுமதி வருமானத்திலும் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், இலங்கை தேயிலைச் சபை தேயிலையின் தரத்தை முன்னேற்றும் பொருட்டு முதிர்ச்சியடையாத மற்றும் பழுதடையாத தேயிலைக் கொழுந்துகளை மொத்த தேயிலைக் கொழுந்தின் 60 சதவீதமளவில் பேணுவதற்காக “சிறந்த கொழுந்து 60” என்ற நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. மேலும் கொழுந்தைக் கொண்டு செல்லும் முறைமைகள், கொழுந்து சேகரிக்கும் மடுவங்கள் மற்றும் கொழுந்து சேகரிக்கும் பாரிய பின்னல் கூடைகளை மேம்படுத்துவதற்கு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதேவேளை, சிறந்த தயாரிப்பு நடைமுறை நியமங்களுடன் இணங்கியொழுகாமை காரணமாக குறைந்த தேறிய விற்பனைச் சராசரியைக் காட்டிய தேயிலைத் தொழிற்சாலைகளின் பதிவை இலங்கைத் தேயிலைச் சபை இடைநிறுத்திய வேளையில் அத்தகைய தொழிற்சாலைகளுக்கான தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை ரூ.50,000 இலிருந்து ரூ.500,000 வரை அதிகரித்தது. இத்துடன், தேயிலை

சிறு உடமைகளில் தேயிலை பறிப்பதுக்கான பொறிமுறையை இயந்திரமயப்படுத்தல் மற்றும் உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில் தேயிலைத் தொழிற்சாலைகளூடாக தேயிலை சிறு உடமையாளர்களிடையே பொறி மற்றும் கருவியைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வலு அதிகார சபையுடன் இணைந்து தேயிலை ஆராய்ச்சி நிலையம் தேயிலைத் துறையில் வலு வினைத்திறனை மேலும் அதிகரிப்பதற்கு 2012 - 2016 இற்கான செயற்றிட்ட திட்டத்தை ஆரம்பித்தது.

**இறப்பர் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய உபாயங்கள் ஏற்கனவேயுள்ள இறப்பர் பெருந்தோட்டங்களில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதிலும் ஏனைய பிரதேசங்களுக்கு (அம்பாறை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு) இறப்பர் செய்கையை விரிவாக்குவதிலும் கவனம் செலுத்தியது.** இறப்பர் மீள் நடுகை (எக்டேயருக்கு ரூ.175,000) மற்றும் புதிய நடுகை (எக்டேயருக்கு ரூ.150,000) என்பவற்றுக்கான உதவுதொகைத் திட்டம் 2014இலும் தொடர்ந்து இடம் பெற்றது. இவ்வாண்டில் மரபுவழி மற்றும் மரபுவழியல்லாப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட புதிய நடுகை முறையே 723 எக்டேயராகவும் 582 எக்டேயராகவும் விளங்கியது. இதேவேளை, சிறு உடமையாளர் இறப்பர் நிலங்களில் மீள்நடுகையானது 1,341 எக்டேயர்களில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்ட மற்றும் புதிதாக நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு முறையே 15,734 எக்டேயர்களாகவும் 13,569 எக்டேயராக விளங்கி நடுத்தர காலத்தில் இறப்பர் உற்பத்தி இலக்குகளை அடைய உதவும். இத்துடன், 2015 இற்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் இடைக்கால வரவு செலவுத்திட்டம் இறப்பர் சிறு உடமையாளர்களுக்கான உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவு விலைத் திட்டத்தை முன்மொழிந்தது. இத்திட்டத்தின் கீழ், கொழும்பு இறப்பர் ஏலத்தின் மாதாந்த சராசரி விலைகளுக்கும் சிறு உடமையாளர்களுக்கான உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவு விலைகளுக்கும் (கி.கிறாம் ஒன்றுக்கு ரூ.350) இடையேயான வித்தியாசத்தை அவர்களுக்குச் செலுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதன்படி, 2015 சனவரி இறுதியில் இத்திட்டத்தின் கீழ் ரூ.4 மில்லியன் கொண்ட தொகை 2,000 பயனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

**மீள்நடுகைக்கான ஊக்குவிப்பு, தெங்குத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல், ஆராய்ச்சி தொடர்பான செயற்பாடுகள் மற்றும் நோய் பரவுவதை ஒழித்தல் என்பவற்றுக்கான நிறுவன ரீதியிலான உதவி இவ்வாண்டிலும் வெற்றிகரமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.** ஏற்கனவேயுள்ள தெங்குத் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் மற்றும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக் கைத்தொழில்களை ஆரம்பிக்கும் நோக்கில் 6 சதவீத வட்டி வீதத்தில் ரூ.2 மில்லியன் கொண்ட ஆகக்கூடிய கடன் தொகையை வழங்கும் நிதி உதவியான “கப்றுக்க நிபயும் திறிய” என்ற கடன் திட்டம் 2014இலும் தொடர்ந்து இடம்பெற்றது. இதன்படி, இத்திட்டத்தின் கீழ் 2014ஆம் ஆண்டில் 61 புதிய கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதேவேளை, தெங்குத் துறையின் அபிவிருத்திக்காக அரச நிறுவனங்களால் செலவழிக்கப்பட்ட மூலதனச் செலவினம் 2013இன் ரூ.751 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.767 மில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், தெங்கு உற்பத்தி இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீதான வரிகள் மற்றும் தீர்வைகள் தொடர்ந்தும் பரவலாக மாற்றமின்றி இருந்தபோதிலும் இவ்வாண்டின் இறுதியை நோக்கி உள்ளூர் சந்தையில் உடன் தேங்காயுக்கான பலத்த பற்றாக்குறை காரணமாக உடன் தேங்காய் ஏற்றுமதிகள் 2014 திசெம்பரில் தடை செய்யப்பட்டுள்ளது.

**அரச நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்ட கால்நடை முதன்மைத் திட்டத்தின் கீழான செயற்றிட்டங்கள் 2014இல் தொடர்ந்தும் வெற்றிகரமாக செயற்பட்டன.** 2014இல் இலங்கையில் வைரஸ் எச்பிஎஜ (எச்5எச்7) இதற்கான சான்று இல்லாதபோதிலும் பாரிய நோய்களைத் தோற்றுவிக்கும் ஏவியன் இன்வுலுவன்சாவிற்கு எதிரான தேசிய கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் மேலும் பலமடைந்தது. எனினும், நாட்டில் கால் மற்றும் வாய் நோய் பரவியமை 2014இல் பசுப்பால் மற்றும் எருமைப்பால் உற்பத்தியைக் குறிப்பிடத்தக்களவில் பாதித்தது. இதேவேளை, தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட 2,000 கலப்பினப் பசுக்களுக்கு மேலதிகமாக 2015இல் உயர்விளைவைக் கொண்ட 2,500 பசுக்களை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டு வழங்குனருடன் உடன்படிக்கையில் கைச்சாதிட்டது. உடன் பாலுக்கான அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு அதன் உற்பத்தி இயலளவை அதிகரிக்கும் பொருட்டு மில்கோ ஏற்கனவே இருக்கும் அதன் பால் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இதன்படி, பொலனறுவையிலுள்ள மில்கோ தொழிற்சாலையின் உற்பத்திச் செயன்முறை 2014இல் நவீனமயப்பத்தப்பட்டதுடன் திகண மற்றும் அம்பேவல தொழிற்சாலைகளின் நவீனமயமாக்கம் 2015இல் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, நாரகேன்பிட்டி பால் தொழிற்சாலை நவீன தொழில்நுட்பத்துடன் கம்பஹா மாவட்டத்தில் பத்தலகம இல் மீளமைக்கப்பட்டது. இந்நவீனமயமாக்கியலுடன், மில்கோ உள்நாட்டு பால் கேள்வியின் ஏறத்தாழ 50 சதவீதத்தை பூர்த்தி செய்வதற்கான அதன் இயலளவை அதிகரிக்க உத்தேசித்துள்ளது.

**மீன்பிடித்துறைக்கான நடுத்தர கால உத்திகள் ஆழ்கடல் மீன்பிடியிலிருந்து மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் மீன்பிடிச் செயற்பாட்டை அதிகரிப்பதற்கான தேவையை எடுத்துக் காட்டுகிறது.** இதை அடைவதில்,

இவ்வாண்டில் பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவை வெளியில் பொருத்தப்பட்ட எஞ்சினுடனான 712 படகுகள் மற்றும் 118 பலநாள் படகுகளை சேர்த்துக் கொண்டதன் மூலம் மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கையைப் பலப்படுத்தல் மற்றும் ரூ.40 மில்லியன் வட்டிச் சலுகையுடன் ரூ.281 மில்லியன் கொண்ட 'தியவற திறிய' திட்டத்தின் கடன்களை வழங்கல் என்பவற்றை உள்ளடக்குகிறது. மேலும், ஆழ்கடல் மீன்பிடித்தலை வசதிப்படுத்துவதற்கு, மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரங்களினது கட்டுமானம் மற்றும் தரமுயர்த்துவதற்கு மொத்தம் ரூ.3,000 மில்லியன் ஒதுக்கப்பட்டது. ஏறத்தாழ ரூ.326 மில்லியன் மதிப்பிடப்பட்ட பல நாள் மீன்படிப்புக்களை வசதிப்படுத்துவதற்கு இரு தாய்க் கலங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒரு செயற்றிட்டமானது முன்மொழியப்பட்டது. இதன் விளைவாக, மீன்பிடிக் கைத்தொழில் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளின் அதிகரித்த காலத்தால் நன்மையடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரசாங்கம் கலங்களைக் கண்காணிக்கும் முறைமையை நிறுவுவதற்கான வழிமுறைகளை உடனடியாக ஆரம்பித்தது. இச்செயற்திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்காக வானொலிச் சைகையைப் பெறும் கருவி போன்ற தேவையான கருவியை ஒவ்வொரு பலநாள் படகிலும் நிறுவுவதற்கான செலவு கடன் திட்டத்தினூடாக மீனவர்களுக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2014இல் 35 பலநாள் படகுகள் வானொலிச் சைகையைப் பெறும் கருவி ஐக் கொண்டிருந்தன. இதேவேளை, கலத்தைக் கண்காணிக்கும் முறைமையின் அறிமுகம் பன்னாட்டு நியமங்கள் மற்றும் ஆழ்கடல் மீன்பிடிக்கும் பிரயோகிக்கத்தக்க இணங்கியொழுதலை பலப்படுத்த உதவும் அதேவேளை ஆழ்கடலில் தொழிற்படும் இலங்கைக் கொடியுடனான கலங்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான, ஒழுங்குமுறைப் படுத்தப்படாத அறிவிக்கப்படாத மீன்பிடித் தொழிற்பாடுகளை இல்லாமல் செய்கிறது. இலங்கையின் கடல் உணவு ஏற்றுமதிகளுக்கான முக்கிய சந்தையான ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை மீனவர்கள் பன்னாட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மோசமாக இணங்கியொழுகியமை காரணமாக 2015 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் மீன் ஏற்றுமதிகள் மீது தடையை விதித்தது. எனவே, ஆழ்கடல் மீன்பிடி மீது பன்னாட்டு ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகுவதில் கலம் கண்காணிப்பு முறைமையின் பயனுறுதிமிக்க நடைமுறைப்படுத்தல், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய சேருமிடங்களில் இலங்கைக் கடல் மீன் ஏற்றுமதிகளுக்கான சந்தைகளைப் பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமாகும்.

**வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ்வரும் நிறுவனங்கள் உள்நாட்டு வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு பல எண்ணிக்கையான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தின.** 2014இல் நான்கு புதிய வகை அரிசி வெளிவிடப்பட்டிருக்கையில் உள்ளூர் பயிர்ச் செய்கைக்காக சிறந்த பின்பற்றல் மற்றும் உயர் விளைச்சலுடனான எம்ஐபிஓ 1 என்ற புதிய பெரிய வெங்காய வகை வெளிவிடப்பட்டது. களப்பயிர்களின் பல புதிய வகைகள் 2015இல் வெளியிடுவதற்காக நடைமுறையிலுள்ளன. உள்நாட்டில் விருத்தி செய்யப்பட்ட ஆறு கலப்பின மிளகாய்களுக்காக தேசிய ஒருங்கிணைந்த வகை பரிசோதனைக்காக பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டன. இரண்டு பெரிய வெங்காய வகைகளின் பின்பற்றலைச் சோதனை செய்வதற்கு தேசிய ஒருங்கிணைந்த வகைப் பரிசோதனைப் பரீட்சிப்புக்கள் மற்றும் பின்பற்றல் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. இதேவேளை, 2014இன் பிற்பகுதியில் நிலவிய வரட்சி நிலைமைகள் காரணமாக நடுத்தர பருவகால பயிர்ச்செய்கையுடன் ஏனைய களப்பயிர்களின் பயிரிடப்பட்ட அளவை அதிகரிப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. மேலும், உணவுப் பாதுகாப்பு காப்புறுதி விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. தட்டைப் பயறு, சோயா அவரை, உழுந்து, நிலக்கடலை மற்றும் எள்ளு போன்றவற்றின் பயிர்ச்செய்கை அம்பாந்தோட்டை, வவுனியா மற்றும் கிளிநொச்சி போன்ற பல மரபுரீதியற்ற பிரதேசங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. வேளாண்மையாளர் பயிற்சி, விதையை உறுதிப்படுத்தல் மற்றும் விற்பனை நிலையங்களை நிறுவுதல் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் துணைக்களப் பயிர்களின் பெறுமதி கூட்டல் பொருட்களைப் பிரபல்யப்படுத்தும் அவற்றின் செயற்றிட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டது. வேளாண்மைக்கு இளைஞர்களை ஈர்க்கும் நோக்கத்துடன் இளைய வேளாண் - தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முழுத் தீவையும் உள்ளடக்கும் விதத்தில் 800 இற்கும் கூடுதலான வேளாண் - தொழில் முயற்சியாளர்கள் இணங்காணப்பட்டு வசதிப்படுத்தப்பட்டனர். 261 புதிய பண்ணைகள் அவற்றின் இயலளவை தரமுயர்த்த தீர்மானித்ததன் மூலம் 2014இல் வர்த்தக ரீதியான பண்ணைகளை நிறுவுதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் 2014இல் தொடர்ந்தும் இடம்பெற்றது. இதேவேளை, இவ்வாண்டில் சேதனப் பசளை ஊக்குவிப்புத் தொடர்பான நிகழ்ச்சித் திட்டமும் தொடர்ந்து இடம்பெற்றிருக்கையில் சிறுநீரக நோய்கள் சம்பவங்கள் நிகழும் அதிகரித்த பிரதேசங்களில் விசேட கவனம் செலுத்தியதன் மூலம் அநுராதபுர மாவட்டத்தில் சேதனப் பண்ணைச் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.


**உள்ளூர் வேளாண்மைப் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல கொள்கை வழிமுறைகள் 2015இற்கான இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.** அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட நெல் கொள்வனவுத் திட்டத்தின்

## சிறப்புக்குறிப்பு 3 வளமாக்கி மானியத்தை பகிர்ந்தளிப்பதற்கான ஓர் மாற்று முறையாக நேரடி பண மாற்றல்கள்


விவசாயத்தின் வெளியீட்டை அதிகரித்தல் மற்றும் விவசாயிகளுக்கு உயர்ந்தளவான வருவாய்களை உறுதி செய்தல் போன்ற இலக்குகளுடன் தொடர்ச்சியாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக வளமாக்கிகளுக்கான ஏற்பாடுகளை வழங்கியிருந்தது. 50 கிலோகிராம் யூரியா வளமாக்கி பை ஒன்றை ரூ.350 இற்கு வழங்குகின்ற தற்போதைய வளமாக்கி மானிய திட்டம் 2005இல் பிரதானமாக நெல் பயிரிடலுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது அதன் பின்னர் 2007 இல் ஏனைய பல பெருந்தோட்ட பயிர்களுக்கு விரிவாக்கப்பட்டதுடன், இறுதியாக 2011இல் ஏனைய எல்லா பயிர்களையும் உள்ளடக்கியதுடன் 50 கிலோகிராம் வளமாக்கி பையொன்று ரூ.1,200 இற்கு வழங்கப்பட்டது. வளமாக்கிகளின் சராசரி பன்னாட்டு விலைகளின் அடிப்படையில் நோக்குகின்ற போது மானியமானது வழங்கப்படாமல் இருந்திருந்தால் 2014இல் உள்நாட்டு சந்தை விலைகள் சராசரியாக ரூ.2,280 நெல் விவசாயிகள் வளமாக்கிகளை உயர்ந்த விலையில் விற்பனை செய்வதற்கு இட்டுச்சென்றிருந்தது. விவசாயிகளினால் இலாபத்தை நோக்கிய இந்த நடத்தையானது இம்மானிய திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் நெல் துறையின் மீது வளமாக்கிகளின் குறைந்த பயன்பாட்டிற்கு இட்டுச்சென்றிருக்கக்கூடும்.

ஆ) விவசாயப் பணிகள் நிலையங்களின் மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகள், போதுமான நிதியின்மை மற்றும் போதுமான வளங்களின்மை போன்றவை வளமாக்கிகளின் வினைத்திறனான விநியோகத்தை பாதித்திருந்தன. வளமாக்கி வழங்கல்களின் நீண்டகால தாமதம் மற்றும் வளமாக்கி பைகளின் நிறைகளின் குறைபாடுகள் என்பன விவசாயிகளின் செலவுகளுடன் சேர்க்கப்பட்டிருந்தன.

வரைபடம் சி.கு 3.1 வளமாக்கி மானியம் மீதான செலவீடு




வரைபடம் சி.கு 3.2 இலங்கையில் வளமாக்கிகளின் பயன்பாடு




ஆக காணப்பட்டிருக்கக் கூடும். 2005-2014 காலப்பகுதியில் வளமாக்கி மானியம் மீதான அரசாங்க செலவினம் ரூ.238.3 பில்லியன் பெறுமதியாகவிருந்தது. மொத்த அரசாங்க செலவினத்தின் சதவீதமாக வளமாக்கி மானியத்தின் மீதான வருடாந்த செலவினம் சராசரியாக 2 சதவீதமாக காணப்பட்டது.

வளமாக்கி மானியங்களின் அறிமுகப்படுத்தலானது பயிர்களின் விளைவுகளை அதிகரித்திருந்த போதும் இத்திட்டத்துடன் இணைந்துள்ள பல்வேறு பிரச்சனைகள் அடிக்கடி அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன.

அ) நெல் துறைக்கென ஒரு மானியம் மற்றும் ஏனைய பயிர்களுக்கென மற்றுமொரு மானியம் என்ற இரண்டு முறைகளிலான மானியங்களின் தற்போதைய இருப்பு

இ) அரசினால் வளமாக்கிகளின் தனியார் இறக்குமதியாளர்களுக்கான/ விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளின் தாமதங்கள் பயிர்ச்செய்கைக் காலங்களில் சந்தையில் வளமாக்கிகளின் பற்றாக்குறையைத் தோற்றுவித்திருந்ததுடன் அது உயர்ந்த பட்ச அறுவடையை அனுபவிப்பதற்கான வளமாக்கிகளின் நேரத்துடனான பிரயோகத்தினைப் பாதித்திருந்தது. இறக்குமதி செய்யப்படுகின்ற வளமாக்கிகளின் தரமும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

ஈ) மானிய விலைகளில் வளமாக்கிகளை வழங்குதல் சில துறைகளில் வளமாக்கிகளின் அதிகப்படியான பயன்பாடு தொடர்பில் அக்கறையையும் அதிகரித்தது. முறையான

மேற்பார்வை மற்றும் ஆலோசனைப் பணிகளின் பற்றாக்குறையும் மோசமான நிலைமையின் தன்மைக்கு பங்களித்திருந்தது.

உ) விநியோகத்துடன் தொடர்புடைய அலுவலர்கள் ஊழல் நடவடிக்கைகள் ஊடாக சில வாடகைத் தேடல்களுடன் தொடர்புபட்டவர்கள் எனும் குற்றச்சாட்டுக்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கசிவுக்கும் வழிவகுத்திருந்தது. விநியோக மற்றும் நிர்வாக செலவுக்கு மேலதிகமாக அரசாங்கம் அத்தகைய கசிவுகளை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு முறைமையை பேணவேண்டியுள்ளமையால் அது திட்டத்தின் நிர்வாகத்தினை அதிக சவால் மிக்கதாக மாற்றுகிறது.

இறைத்திரட்சி செயன்முறையில் அரசாங்க செலவினங்களை சிக்கனப்படுத்தும் தேவைப்பாட்டுடன் மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் காணப்படுவதன் காரணத்தால் இத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை உச்சப்படுத்தி அதன் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் தற்போதுள்ள வளமாக்கி மானியத்திட்டத்தினை மீளாய்வு செய்வது மிகவும் பொருந்தமானதாகவிருக்கும்.

இது தொடர்பில், ஏனைய நாடுகளினால் மானியம் வழங்கல் தொடர்பில் பயன்படுத்தப்பட்டுள்ள உபாயங்களை கருத்தில் கொள்வது பெறுமதியுடையவையாகக் காணப்படுகின்றன. பிரேசில், இந்தியா, இந்தோனேசியா போன்ற சில நாடுகளில் நேரடி பண மாற்றல் முறைமையானது மண்ணெண்ணை, அரிசி, வளமாக்கி போன்ற வகைகளிலான[1] மானிய வழங்களுக்கு பதிலாக இறுதிப்பயனாளிகளுக்கு பணம்/வங்கி மாற்றல்கள் போன்ற நேரடி மானியங்களை வழங்குவதற்கு ஒரு மாற்று முறைமை பயன்படுத்தப்பட்டது. இது மானிய விலைகளில் முன்னர் விநியோகிக்கப்பட்ட பொருட்களை சந்தையில் தீர்மானிக்கப்பட்ட விலைகளில் வழங்குவதற்கு இயலச் செய்ததுடன் இதனால் சந்தை திரிபுகள் குறைவடைந்தன. சந்தை சூழலின் ஊடாக திட்டமிடப்பட்ட நன்மைகளை உயர்த்தும் நோக்குடன் 2013 சனவரியில், இந்திய அரசாங்கம் இலக்கிடப்பட்ட பயனாளிகளின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாக பணவடிவில் மானியத்தை வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் வளமாக்கி மானியம் உள்ளடங்கலாக ஏழு மானிய திட்டங்களை உள்ளடக்கி நேரடி பயன் மாற்றல் செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

1. உதாரணமாக விவசாயி ஒருவர் ஒவ்வொன்றும் ரூ.1,800 பெறுமதி கொண்ட ஆனால் வளமாக்கி மானியத் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் ரூ.350இற்கு வழங்கப்படுகின்ற 50 கிலோகிராம் நிறைகொண்ட 6 பைகளை பயன்படுத்துகின்றார் என எடுத்துக்கொள்க. எனவே, இந்த விவசாயினால் பயன்படுத்தப்பட்ட வளமாக்கிகள் மீதான மொத்த மானியத்தொகை ரூ.1,450x6 = ரூ.8,700 ஆகும். இதே உதவுத்தொகை நேரடி பண மாற்றல் முறையில் குறித்த விவசாயினது வங்கிக் கணக்கிற்கு ரூ.8,700 வைப்பிலிடுவதன் மூலம் ஈடுசெய்யலாம். இது நிர்வாகச் செலவுகள், கசிவுகள், சந்தைத்திரிபுகள் என்பவற்றை குறைக்கும் அதேவேளை விவசாயிகள் வளமாக்கிகளின் பாவனையை உச்சப்படுத்துவதற்கும் அனுமதிக்கின்றது.

இந்த வகையிலான வளமாக்கி விநியோகத்திலிருந்து அப்பால் நகர்வதற்கான காரணம், இரட்டை விலையிடல், வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு அக்கறை காட்டாமை, பயனாளிகள் தொடர்பில் இலக்கிடலின் குறைபாடு, வளமாக்கிகளின் அளவுக்கதிகமான பயன்பாடு, திரிபுகள் மற்றும் கசிவுகள் போன்ற குறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும், இக்கொள்கையின் வெற்றியானது இலக்கிடப்பட்ட பயனாளிகளின் அடையாளப்படுத்தல் தொடர்பிலான உண்மைத்தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றில் தங்கியுள்ளது. பயனாளிகளுக்கு நேரடி பண மாற்றல்களை வழங்குகையில் இந்தியா எதிர்நோக்கிய மற்றுமொரு பிரச்சனையானது வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அதிகமான வீட்டுதுறையினர் வங்கிக் கணக்குகளை கொண்டிருக்காத வேளையில், அனேக கிராமங்கள் ஒரு வங்கிக் கிளையைக்கூட கொண்டிருக்கவில்லை.

வளமாக்கி மானியங்களை வழங்குவதற்காக நேரடி பண மாற்றல்கள் முறைமை வகையிலான ஒழுங்குபடுத்தல்களை கொண்டிருப்பதன் நன்மைகள் மற்றும் வரையறைகள் கீழே விபரிக்கப்படுகின்றன:

**நன்மைகள்:** நேரடி பண மாற்றல்கள் முறைமையின் கீழ் மானியத் தொகை பயனாளிகளின் வங்கிக்கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிடப்படுகின்றதுடன் இது மானியம் இலக்கிடப்பட்ட பயனாளிகளுக்கு சென்றடைதலை உறுதி செய்கின்றது. நிதியானது பயனாளிகளுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் அவன்/அவள் தேவையான வளமாக்கிகளின் அளவினை சந்தை விலையில் கொள்வனவு செய்வதற்கு முடியுமானதாகவிருக்கும். மானியமானது பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படுகின்றமையால் நிதியியல் தேவைகளுக்கான விவசாய சமூகத்தின் அணுகுமுறை அதிகரிப்பதுடன் பல்வகை நன்மைகளை கொண்டுள்ள நிதியியல் உள்ளடக்கங்களை மேம்படுத்தும். மேலும், நேரடி பண மாற்றல் முறைமையானது வளமாக்கிகளின் மேலதிக பயன்பாட்டை தடுப்பதன் மூலம் விவசாயிகள் அதிக வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு தூண்டுதலை வழங்கக்கூடிய வேளையில் அதிக வினைத்திறன், கிரய பயன்பாடு மற்றும் உரிய நேரத்திலான வளமாக்கிகளில் விநியோகம் என்பவற்றையும் வசதிப்படுத்தும். சந்தை விலையானது மேலும் பாதிக்கப்படாததன் காரணத்தால் விவசாயிகள் அசேதன வளமாக்கியிலிருந்து இயற்கை வளமாக்கிக்கு மாறுவதற்கு ஊக்கப்படுத்தப்பட்டனர். இது விவசாயத்தில் ஊட்டங்களின் அதி சமத்துவ மற்றும் வினைத்திறனான பிரயோகங்களுக்கு வழிவகுக்கும். நேரடி பண பரிமாற்றல் முறைமையானது நிர்வகிப்பவருக்கு ஒப்பீட்டளவில் இலகுவானதாக காணப்படுவதால் அரசாங்கத்தினால்

தாங்கிக் கொள்ளப்படும் இம்மானியத் திட்டத்தின் நிர்வாகச் செலவானது குறைவாக காணப்படுவதுடன் கசிவுகளும் குறைவானதாக காணப்படும். ஒட்டுமொத்தத்தில், நேரடி பண மாற்றல் முறைமையானது மானியக் கொடுப்பனவுகளின் சிறந்த இலக்கிடலுக்கு அனுமதிக்கின்ற வேளையில் வினைத்திறன் மற்றும் வெளிப்படை தன்மையினை கொண்டு வருகின்றதுடன் இறைப்பற்றாக்குறையின் குறைப்புக்கும் பங்களிக்கின்றது.

**வரையறைகள்:** நேரடி பண மாற்றல் முறைமையின் கீழ் பயனாளிகளை அடையாளம் காணுதல் மிகவும் சிரமானதொன்றாவதுடன் இது சிறந்த பயனாளி தெரிவு அளவையின் தேவையொன்றினை எடுத்துக்காட்டுகிறது. அத்தகையதொரு மானிய திட்டத்திலும் சில இலக்கிடப்பட்ட பயனாளிகள் நிகழ்ச்சித்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாது போகின்ற வேளையில் பொருத்தமில்லாத சிலர் நன்மையடையலாம். மேலும், வங்கி உட்கட்டமைப்பானது மட்டுப்படுத்தப்பட்டதாகவும் மக்கள் வங்கித்தொழில் வசதிகளை பெற நீண்டதூரம் பயணிக்க வேண்டியும் இருப்பின், நேரடி பண மாற்றல் முறைமையானது எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை வழங்கமாட்டாது போல் தோன்றுகின்றது. நிதியியல் சார்ந்த கல்வியறிவு மட்டம் கிராம பிரதேசங்களில் தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதனால் அனைத்து கிராமிய வங்கிகள் மற்றும் தபால் அலுவலகளையும் ஒரு பாரிய வங்கித்தொழில் வலையமைப்புக்குள் தொடர்புபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்ற அதேவேளை தற்போது காணப்படுகின்ற வளமாக்கி மானிய திட்டத்திற்கு நேரடி பண மாற்றல் முறைமையினை ஒர் வினைத்திறனுள்ள மாற்றீடாக உருவாக்கும் நோக்குடன் கிராமிய சமூகத்தினிடையே நிதியியல் கல்வியறிவை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும், நேரடி பண மாற்றல் முறைமையின் கீழ், விவசாயிகள் பின்தங்கிய கிராமங்களில் வலையமைப்புகளை வழங்கும் தனியார் துறை வழங்குனர்கள் மீது முழுமையாக தங்கியிருக்கக்கூடும். மேலும் உலகலாவிய சந்தை விலைகளின் ஏற்றத்தாழ்வுகள் விவசாயிகளால் முகம் கொடுக்கப்படும் விலைகளில் உயர்ந்த தளம்பல்களுக்கு காரணமாவதுடன் இது நிச்சயமற்ற தன்மையினையும் உருவாக்கும். வளமாக்கிகளின் காலத்திட்டப் பயன்பாடானது நேர உணர்திறன் மிக்கவையாக காணப்படுவதனால் இதனை பூரண வினைத்திறன்மிக்கதொன்றாக மாற்றுவதற்கு பண மாற்றல்கள் சரியான நேரத்தில் வழங்கப்படல் வேண்டும். இவற்றுக்கு மேலாக பண மாற்றல்கள் முறைமையின் கீழ் விவசாயிகள் தாங்கள் பெற்றுக்கொண்ட பணத்தை செலவழிப்பதற்கு கடப்பாடற்றவர்களாக உள்ளதனால் இந்த முறைமை வினைத்திறனற்றதாக மாறக்கூடியதுடன் விவசாயத்தின் குறைந்த விளைவுகளுக்கும் இட்டுச்செல்லக்கூடும்.

முடிவாக, மேற்கூறப்பட்ட விவாதங்கள் இலங்கையில் தற்போதுள்ள வளமாக்கி மானிய திட்டத்தின் குறைபாடுகளை வெளிக்காட்டுவதுடன் ஏனைய நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மானிய ஏற்பாடுகளின் வேறுபட்ட முறைகளை பகுப்பாய்வு செய்கின்றது. குறிப்பாக, நேரடி பண மாற்றல் முறைமை, மற்றும் அதன் நன்மைகள் மற்றும் வரையறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. தற்போது காணப்படுகின்ற வளமாக்கி மானியத்திட்டத்திற்கு நேரடி பண மாற்றல்கள் முறைமை போன்ற வேறுபட்ட நடைமுறை வளமாக்கி மானிய திட்டத்தினை மாற்றீடு செய்வதற்கு எல்லா ஆர்வலர்களிடமிருந்தும் உரிய ஆலோசனைகள் தேவைப்படுவதுடன் இது பின்பற்றப்பட்டால், அத்தகைய நகர்வுகளிலிருந்து எழுகின்ற ஏதேனும் குறுங்கால எதிர்விளைவுகளை குறைக்கும் நோக்குடன் படிப்படியாக அமுல்படுத்தப்படல் வேண்டும். பயனாளிகள் தொடர்பில் சிறந்த அடையாளப்படுத்தல், நிதியியல் கல்வியறிவு மற்றும் நிதியிடல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துதல், விவசாய விரிவாக்க பணிகளை மேம்படுத்தல் மற்றும் நேரடி மாற்றல்களின் ஏதாவது தவறான பயன்பாட்டினை குறைப்பதற்கான வினைத்திறனுள்ள கண்காணிப்பு வழிமுறையை அபிவிருத்தி செய்தல் என்பன இடைக்கால அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

உசாத்துணைகள்:


Central Bank Annual Reports (various years).

Ekanayake, H. K. J. (2006), "Impact of Fertiliser Subsidy in Paddy Cultivation in Sri Lanka". Staff Studies, Vol 36, Central Bank of Sri Lanka.

Government of India (2011), "Interim Report of the Task Force on Direct Transfer of Subsidies on Kerosene, LPG and Fertiliser". New Delhi, Ministry of Finance.

Jayalath, M., Wickramasinghe and Wickramasinghe, W. (2008), "Analysis of Fertiliser Subsidy Policy in the Small Farming Sector: A Study Conducted in Anuradhapura District".

Kishore, A., Praveen, and Roy. D. (2013), "Direct Cash Transfer System for Fertilisers: Why it Might be Hard to Implement", Economic and Political Weekly, Vol XLVIII.

Weerahewa, J., Kodithuwakku, S. and Ariyawardana, A. (2010), "The Fertiliser Subsidy Programme in Sri Lanka", Cornell University, New York.


கீழ் சம்பாவின் கொள்வனவு விலையை கி.கிறாமுக்கு ரூ.50க்கும் நாடு விலையை ரூ.45 இற்கு அதிகரிப்பதற்கு ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், உருளைக்கிழங்கு மற்றும் தேயிலைக் கொழுந்தின் உற்பத்தியாளர் விலைகளை கி.கிறாமொன்று ரூ.50 இற்கும் ரூ.80 இற்கும் அதிகரிப்பதற்கான ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்துடன், ஆர் எஸ்எஸ் இறப்பருக்கான ஆகக்குறைந்த உத்தரவாதமளிக்கப்பட்ட இறப்பர் விலையும் கி.கிறாமிற்கு ரூ.300 இலிருந்து கி.கிறாமிற்கு ரூ.350இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பால் உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டு

பசும் பாலின் உற்பத்தியாளர் விலை தற்போதைய லீற்றர் ஒன்றிற்கான ரூ.60 இலிருந்து ரூ.10 ஆல் அதிகரிக்கப்பட்டது. தற்போதுள்ள வளமாக்கி உதவித் தொகை திட்டம் தொடர்பாக எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் இத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் வளமாக்கியின் தரத்தை தரமுயர்த்துவது தொடர்பாக வலியுறுத்தல் செய்யப்பட்டுள்ளது. ஏனைய முன்மொழிவுகளுள், வர்த்தக வங்கிகளால் வேளாண்மையாளர்களுக்கு கடந்த காலத்தில் வழங்கப்பட்டு தற்பொழுது நிலுவையிலிருக்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான 50 சதவீத தளர்த்தல் ரூ.100,000 கொண்ட ஆகக்கூடிய கடன் தொகைக்கு உட்பட்டதாக முன்மொழியப்பட்டுள்ளது.

## கைத்தொழில்

**கைத்தொழில் துறை 2013இன் 9.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இன் 11.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்விரிவாக்கத்திற்கு அனைத்து முக்கிய துணைத் துறைகளிலுமிருந்து கிடைத்த சாதகமான பங்களிப்பு ஆதரவாக அமைந்ததன் மூலம் மொ.உ.உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்கு முன்னைய ஆண்டின் 31.1 சதவீதத்திலிருந்து 32.3 சதவீதத்திற்கு அதிகரிக்க உதவியது. கட்டடவாக்கத் துணைத் துறை குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்து கைத்தொழில் துறையின் உயர்ந்த வளர்ச்சியைப் பங்களித்தது. அதேவேளை, தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத் துறையின் வளர்ச்சியிலிருந்து கிடைத்த நன்மைகளின் விளைவாக தயாரிப்புத் துணைத் துறை விரிவடைந்தது. சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறை கட்டுமான நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. அதேநேரம், மின்வலு, வாயு மற்றும் நீர்த் துணைத் துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு உயர் பெறுமதிகூட்டப்பட்ட நீர் மின்வலுவினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.

### சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்

**சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறை 2013இன் 11.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 11.0 சதவீதத்தினால் விரிவடைந்தது.** இத்துணைத் துறையானது இரத்தினக்கல் அகழ்தல் மற்றும் ஏனைய சுரங்கமகழ்தல் தொடர்பான நடவடிக்கைளையும் உள்ளடக்கியிருக்கிறது. 2013இன் 11.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 13.8 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்த ஏனைய சுரங்கமகழ்தல், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தலின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாளராக விளங்கி ஒட்டுமொத்தத் துணைத் துறையில் 83.7 சதவீதப் பங்கினைப் பிரசன்னப்படுத்தியது. இத்துணைத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக கிறைனைட், மணல், சுண்ணாம்பு போன்வற்றிற்கான அதிகரித்த கேள்வி ஆதரவாக விளங்கியது. மேலும், ஏனைய கனிப்பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கமும் இவ்வளர்ச்சிக்கு சாதகமான விதத்தில் பங்களித்தது. ஏனைய சுரங்கமகழ்தலின் கீழ் வருகின்ற காரீய உற்பத்தியும் 2013இன் சுருக்கமடைந்த அதன் உற்பத்திக்கு மாறாக சிறிதளவில் விரிவடைந்தது. இவ்வாண்டுப் பகுதியில் வளமாக்கிக் கைத்தொழிலிலிருந்து கிடைத்த அதிகரித்த கேள்வியை ஈடுசெய்யும் விதத்தில் பொசுப்பேற்றின் உற்பத்தி மேலும் விரிவடைந்தது. கனிப்பொருள் ஏற்றுமதிகள் அளவுச் சுட்டெண்ணின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு கனிப்பொருள் மணல் உற்பத்திகள் முன்னைய ஆண்டில் சுருக்கமடைந்த போதும் இவ்வாண்டில் உயர் வீதத்தில் விரிவடைந்தன. எனினும், இரத்தினக்கல் அகழ்தல் 1.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்து 2014ஆம் ஆண்டுப் பகுதியில் இரத்தினக்கல் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட சுருக்கத்தினால் பிரதிபலிக்கப்பட்டது.

## தயாரிப்பு

### பதனிடல்

**தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பதனிடல்களை உள்ளடக்கிய பதனிடல் கைத்தொழில் துணைத் துறை 2013இன் 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இத்துணைத் துறையின் வளர்ச்சிக்கு தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மீட்சியே முக்கிய காரணமாக விளங்கியது.** இது தெங்கு உள்ளீட்டு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பினாலும் இவ்வாண்டுப் பகுதியில் அளவு நியதிகளில் ஏனைய தெங்கு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் பிரதிபலிக்கப்பட்டது. தேயிலை ஏற்றுமதியின் அளவும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வீதத்தில் அதிகரித்து வழங்கல் மற்றும் கேள்விப் பக்கங்கள் இரண்டிலும் காணப்பட்ட சாதகமற்ற அபிவிருத்திகளுக்குமிடையிலும் தேயிலை பதனிடல் கைத்தொழில் ஏற்பட்ட வளர்ச்சியை பிரதிபலித்தது. கடுமையான வானிலை நிலைமைகள் உற்பத்திப் பக்கத்தைப் பாதித்த வேளையில் ருஷியாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார அமைதியின்மை ஏற்றுமதிக் கேள்வியில் குறைப்பினை ஏற்படுத்தியது. இவ்வாண்டுப் பகுதியில் பாதிப்பினைக் கொண்டிருந்த இறப்பர் துறையும் இதே அபிவிருத்திகளை அனுபவித்தவிடத்து சாதகமற்ற வானிலை நிலைமைகள் உற்பத்தியைப் பாதித்த வேளையில் லேட்டெக்ஸ் இறப்பருக்கான உலக விலைகளில்

ஏற்பட்ட வீழ்ச்சி இறப்பர் இறக்குமதியின் அதிகரிப்புக்களை ஏற்படுத்தி இதன் மூலம் உள்ளூர் இறப்பருக்கான கேள்வியை குறைவடையச் செய்தது.


## தொழிற்சாலைக் கைத்தொழில்

**பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 16.0 சதவீதத்திற்கு வகைகூறிய தொழிற்சாலைக் கைத்தொழில் 2013இன் 7.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 8.5 சதவீதமான கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** தொழிற்சாலைக் கைத்தொழிலின் அனைத்து வகைகளினதும் மேம்பட்ட செயலாற்றம் இவ்வொட்டு மொத்த வளர்ச்சிக்குப் பங்களித்தது. தொழிற்சாலைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு அதிகரித்த உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கேள்வி மற்றும் இவ்வாண்டுப் பகுதியில் நிலவிய சாதகமான உள்நாட்டு பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலைகள் பெருமளவிற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தன. புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகை அதேபோன்று இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகை போன்ற ஏற்றுமதி சந்தை சார்ந்த கைத்தொழில்கள் 2014இல் முறையே 11.5 சதவீத மற்றும் 8.5 சதவீத கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. தாழ்ந்த வட்டி வீதங்கள், தாழ்ந்த பணவீக்கம் மற்றும் அதிகரித்த வியாபாரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை என்பனவற்றிலிருந்தான பயன் காரணமாக உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்களின் முக்கிய பங்களிப்பாளரான உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகையும் குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினைக் காட்டி 2014இல் 8.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தன.

## தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**தயாரிப்புத் துணைத் துறைக்கான பாரிய பங்களிப்பாளரான தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீடு, முன்னேற்றமடைந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்விகள் மற்றும் தூண்டுதலளிக்கும் உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதாரச் சூழலுடன் சேர்ந்து அதிகரித்தமையின் காரணமாக, 2014இல் தொடர்ந்தும் விரிவடைந்தது.** தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீட்டு அளவை அளவிடப் பயன்படுத்தப்படுகின்றதொரு குறிகாட்டியான தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்[1] முக்கிய துணைத் துறைகளின் அதிகரித்த உற்பத்தியுடன் 2014இல் 6.3 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. விலை உறுதிப்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட உறுதியான குறைந்த வட்டி வீதச் சூழ்நிலை 2014இல் உள்நாட்டுக் கேள்வி மற்றும் தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டினையும் அதிகரிக்கத் தூண்டியது. அணியும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் போன்ற ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள், கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் முன்னணிப் பங்களிப்பாளர்களாக விளங்கின. எனினும், மின்னியல், இலத்திரனியல் மற்றும் கனிம உற்பத்திகள் போன்ற உயர் பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில்கள் முழுமையான உள்ளார்ந்த வளங்களின் மட்டங்களில் தொழிற்படுவதற்கான சாத்தியங்களை இன்னமும் கண்டறிய வேண்டியனவாகவுள்ளன. எனவே, தொழில்நுட்பவியல் துறையிலுள்ள உயர்ந்தபட்ச நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் கைத்தொழில் துறையினை உயர்த்துவதற்கு நாட்டின் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளங்களை பயன்படுத்திக் கொள்வதற்குப் பொருத்தமான கொள்கைகளை நடைமுறைக்கிடுவது இன்றியமையாததாகும்.

வரைபடம் 2.3 தயாரிப்பு துறையின் பெறுமதி கூட்டல்கள் (2002 நிலையான விலைகளில்)




**முன்னணி ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில் ஒன்றாகவும் இலங்கை பொருளாதாரத்தின் இயக்கவியல் மிக்க பங்களிப்பாளராகவும் விளங்கும் அணியும் ஆடைகள் துணைத் துறையானது தொடர்ந்தும் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தது.** அணியும் ஆடைகள் துணைத் துறை 2014இல் 19.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளுக்கான தலைசிறந்த, போட்டி விலைகளிலமைந்ததும் ஆடைகளை வழங்கும் முன்னணி வழங்குநராகத் தொடர்ந்தும் விளங்கியது. குழந்தைத் தொழிலாளர், கட்டாயத் தொழிலாளர்கள் இல்லாமை போன்ற ஒழுக்க நடைமுறைகளைப் பின்பற்றும் தரமான உற்பத்தியாளர் மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்ததொன்றாக பன்னாட்டுப் புகழ்ச்சி அதேபோல் உற்பத்திச் செயன்முறையில் சூழல் சிநேகிதமான பன்னாட்டுத் தரம் என்பன இலங்கை ஆடைக் கைத்தொழிலினை உலக சந்தையில் போட்டித்தன்மையில் பேண இயலச்செய்தது. மேலும், தூண்டுதலளிக்கும் வியாபாரச் சூழல் மற்றும் அமைவிட அனுகூலம் என்பன ஆடைக் கைத்தொழிலின்

1. தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 17 முக்கிய துணைத் துறைகளை உள்ளடக்கி கணிக்கப்பட்டுள்ளது. 2010இனை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒவ்வொரு கைத்தொழில்களின் நிறைகள் ஒதுக்கப்பட்டன. எனினும், தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் அடுத்த மீளாய்வு 2015இல் நடைபெறவுள்ளதனால் 2010இலிருந்து கைக்தொழில் துறைக்குள் ஏற்பட்ட ஏதேனும் கணிசமான கட்டமைப்பு மாற்றங்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

மிகக் கவர்ச்சிகரமானதொரு பிராந்தியமாக இலங்கையை மாற்றியுள்ளது. 2014இல் புடவை உற்பத்திகள் துணைத் துறை 3.4 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு அணியும் ஆடைகள் துணைத்துறையிலிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட புடவைகளுக்கான கேள்வி அதிகரித்தமை மற்றும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து உள்ளூர் துணிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணங்களாக அமைந்தன.

**2014இல் குடிபானத் துணைத் துறை 9.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்வளர்ச்சியானது, 2014இல் 1.5 மில்லியனுக்கும் மேலாக அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட உயர்ந்த எண்ணிக்கையின் காரணமாக பொழுதுபோக்கு கைத்தொழிலில் ஏற்பட்ட உயர்ந்த செயலாற்றத்தினை முக்கியமாகப் பிரதிபலித்தது. குடிபானத் துணைத்துறையில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்குப் பங்களிக்கின்ற குடிவகை உற்பத்திகளின் தயாரிப்பு 8.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், மென் குடிபானங்கள், கனிமநீர் மற்றும் போத்தலிலடைக்கப்பட்ட நீர் என்பனவற்றின் உற்பத்தி 2014இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது,

**உலகளாவிய இயற்கை இறப்பர் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக அதிகரித்த இறப்பர் மூலப்பொருட்களிலிருந்து கிடைத்த நன்மைகளைப் பயன்படுத்தியதன் மூலம் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறை மேலும் விரிவடைந்தது.** தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின்படி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத்துறை 2013இன் 1.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் 13.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு இறப்பர் டயர், ரியூப் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட ஏனைய உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கேள்விகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் உதவியாக அமைந்தன. இறப்பர் உற்பத்திகளின் வெளியீட்டிற்கு பாரியளவில் பங்களித்த திண்ம

வரைபடம் 2.4 தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்




டயர்கள் மற்றும் காற்றடக்கிய டயர் என்பனவற்றின் உற்பத்தி வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊர்திக் கைத்தொழில்களின் சாதகமான அபிவிருத்திகளின் பின்னணியில் அதிகரித்தது. இதேபோன்று இறப்பர் கையுறைக்கான வெளிநாட்டுக் கேள்வி தொடர்ந்தும் திருப்திகரமாக இருந்தமையானது ஏற்றுமதிச் சந்தைக்கான கைத்தொழில், அறுவைச் சிகிச்சை மற்றும் வீட்டு உபயோகத்திற்கான கையுறைகள் என்பனவற்றின் உயர்ந்த வளர்ச்சிக்கு பக்கபலமாக அமைந்தன. அதேவேளை, பிளாத்திக்கு பொருட்களின் உற்பத்தி 2014இல் 22.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் துணைத் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஆதரவளித்தது.

**இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறையின் உற்பத்தி இவ்வாண்டுப் பகுதியில் சாதகமான செயலாற்றத்தினைக் காட்டியது.** தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின்படி, 2014இல் இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறை 10.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. இத்துணைத்துறையின் வளர்ச்சிக்கு வளமாக்கி, சவர்க்காரம், கழுவும் பொருட்கள், தீந்தைகள் மற்றும் வானிஸ் உற்பத்திகள் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் உதவியாக அமைந்தன.

**இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முழு சுத்திகரிப்புக்களையும் உள்ளடக்கிய கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் துணைத் துறை 2014இல் 3.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் இயலளவுப் பயன்பாட்டினை மேம்படுத்திக் கொண்டதுடன் மசகெண்ணெய் கலப்புக்களின் (ஓமான் மற்றும் மோர்பண்) மிகப் பொருத்தமான வகைகளைப் பயன்படுத்திக் கொண்டதன் மூலம் 2014இல் அதன் வெளியீட்டையும் அதிகரித்துக் கொண்டது. கசோலின் மற்றும் டீசல் போன்ற உயர்முடிவு உற்பத்திகளின் சுத்திகரிப்பு விளைவு இக்காலப்பகுதியில் மேம்பட்டு முறையே 6.3 சதவீதம் மற்றும் 27.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவு ஆண்டிற்காண்டு வளர்ச்சியைக் காட்டியது.

**உணவு உற்பத்திகளின் துணைத் துறை மீட்சியடைவதற்கான அறிகுறிகளைக் காட்டியதுடன் 2014இல் கலப்பான செயலாற்றத்தினை பதிவு செய்தது.** தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின்படி, உணவு உற்பத்திகளின் துணைத் துறை 2014இன் முதலரைப் பகுதியில் பின்னடைவினைக் கொண்டிருந்ததுடன், ஆண்டின் பின்னரைப் பகுதியில் அதன் உத்வேகத்தினை மீண்டும் பெற்றுக்கொண்டது. எனினும், ஒட்டுமொத்த அளவில், உணவுத் துணைத் துறையின் வெளியீடு இவ்வாண்டுப் பகுதியில் 1.8 சதவீதத்தினால் பின்னடைவினைப் பதிவு செய்தது. வெதுப்பக உற்பத்திகள், பாற்பண்ணை உற்பத்திகள், மா மற்றும்

**அட்டவணை 2.7 தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2010 = 100)**

| | பிரிவு | சுட்டெண் 2013 (அ) | 2014 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | உணவு உற்பத்திகள் (23.7%) | 105.3 | 103.4 | -1.8 |
| 2 | குடிபானங்கள் (8.1%) | 102.4 | 111.8 | 9.2 |
| 3 | புகையிலை உற்பத்திகள் (8.4%) | 96.7 | 87.6 | -9.3 |
| 4 | புடவை (1.6%) | 128.5 | 132.9 | 3.4 |
| 5 | அணியும் ஆடைகள் (23.1%) | 124.9 | 149.5 | 19.7 |
| 6 | தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.8%) | 98.3 | 98.2 | -0.1 |
| 7 | தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மர உற்பத்திகள் (0.1%) | 114.6 | 108.9 | -4.9 |
| 8 | தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (0.1%) | 123.4 | 126.6 | 2.6 |
| 9 | அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (0.7%) | 110.3 | 112.4 | 1.9 |
| 10 | நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (2.2%) | 83.4 | 86.0 | 3.1 |
| 11 | இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் (6.3%) | 74.1 | 82.2 | 10.8 |
| 12 | மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள் (0.1%) | 185.1 | 142.8 | -22.9 |
| 13 | இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (10.5%) | 118.2 | 134.2 | 13.6 |
| 14 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.2%) | 103.2 | 102.9 | -0.3 |
| 15 | அடிப்படை உலோகங்கள் (1.0%) | 102.4 | 112.9 | 10.3 |
| 16 | பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (3.8%) | 111.2 | 97.1 | -12.7 |
| 17 | இலத்திரனியல் சாதனங்கள் (2.3%) | 107.6 | 99.5 | -7.6 |
| | **தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **108.3** | **115.1** | **6.3** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு :
1. கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணுக்கான (2010=100) நிறையிடல் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன
2. 2013இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என்பது தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என மீளப்பெயரிடப்பட்டுள்ளது.


மாப்பொருள் உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் விலங்குத் தீன் உற்பத்திகள் போன்ற உணவு உற்பத்திகளின் வெளியீடு இக்காலப்பகுதியில் சுருக்கமடைந்தன. அதேபோன்று ஏற்றுமதிக்காக பதனிடப்பட்ட மா உற்பத்தியை முக்கியமாக உள்ளடக்கிய மா மற்றும் மா உற்பத்தியின் துணைத்துறை இவ்வாண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு மா இறக்குமதிகளின் மீது இந்தோனேசிய அரசாங்கம் விதித்த உயர்ந்த வரிகளே முக்கிய காரணமாகும். எனினும், கொக்கோ, சொக்கலேட், சீனி, இனிப்புப் பண்டங்கள், இறைச்சி மற்றும் மீன் உற்பத்திகளின் பதனிடல் மற்றும் பாதுகாத்தல் என்பன 2014இல் சாதகமான செயலாற்றத்தினைக் காட்டின.

**கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக புகையிலை துணைத்துறையின் உற்பத்திகளின் வெளியீடு 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் 9.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது.** அதிகரித்த கலால் தீர்வையின் காரணமாக உயர்வடைந்த சிகரெட் விலைகள் மற்றும் புகையிலை நுகர்வுடன் தொடர்பான பொதுமக்கள் நலம் தொடர்பான கரிசனைகள் என்பன இக்காலப்பகுதியில் புகையிலை உற்பத்திகளுக்கான கேள்வியைக் குறைத்துவிட்டன. சிகரட் பெட்டிகளின் மீது 80 சதவீதம் வரையிலான அளவிற்கு படத்துடன் கூடிய எச்சரிக்கையினை கட்டாயமாக காட்சிப்படுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளின் காரணமாகவும் அதன் விளைவாக பொதுமக்களின் விழிப்புணர்வு மேம்படும் என்பதனாலும் இனிவரும் ஆண்டுகளில் கேள்வி மேலும் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2014இல் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு மிதமான செயலாற்றத்தினைக் காட்டியது.** உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தித் துணைத் துறையில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறும் சிமெந்து, சுண்ணாம்பு மற்றும் பிளாஸ்டர் உற்பத்திகள் 2014இல் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டிய வேளையில் போசலின் மற்றும் ஏனைய மட்பாண்ட உற்பத்திகளின் உற்பத்தி மெதுவான போக்கினைக் கொண்டிருந்ததுடன் அது உலோகமல்லாக் கனிப்பொருள் துணைத் துறையின் செயலாற்றத்தினையும் பாதித்தது. எனினும், வெட்டல், பட்டை தீட்டல் மற்றும் கற்களை மெருகூட்டல் உற்பத்திகள் துணைத் துறை 2014இல் வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**கப்பல் கட்டுதல் மற்றும் கப்பல் திருத்தல் வேலைகளை முக்கியமாக உள்ளடக்கிய உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 2014இல் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டின.** கப்பல் கட்டுதல் தொடர்பில் பிராந்திய நாடுகளுக்கிடையே நிலவிய கடுமையான போட்டியின் காரணமாக 2014இல் இலங்கை கப்பல் கட்டும் கைத்தொழில் ஓரளவு பின்னடைவினைக் கொண்டிருந்தது. எனினும், கப்பல் திருத்துதல் 2014இல் உயர்ந்த செயலாற்றத்தினைக் காட்டியது. மேலும், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அண்மைக் காலத்தில் அபிவிருத்தி

**வரைபடம் 2.5 தொழிற்சாலை கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் உள்ளடக்கம் - 2014**



செய்யப்பட்ட சிறிய துறைமுகங்கள் புதிய முதலீடுகளைக் கவரும் எனவும் இனிவரும் காலங்களில் புதிய வாய்ப்புக்களை உருவாக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## கைத்தொழில் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியான உதவி

**2014இல் இறைச் சலுகைகள், தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுதல் என்பனவற்றின் மூலமாக கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் நிறுவன ரீதியான உதவிகள் மேற்கொள்ளப்பட்டன.** பிரதேச கைத்தொழில் மயமாக்கலுக்கு உதவியளிக்கின்ற விதத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் முன்னெடுப்புக்களின் கீழ் கைத்தொழில் பேட்டைகள் தொடர்பான வேலைகள் விரைந்து முன்னேற்றமடைந்தன. தற்பொழுதுள்ள 27 கைத்தொழில் பேட்டைகளில் 304 கைத்தொழில்கள் வர்த்தகத் தொழிற்பாடுகளின் கீழும் மற்றொன்று 38 கட்டுமான வேலைகளின் கீழும் காணப்படுகின்றன. இவற்றில் 29 கைத்தொழில்கள் மேல் மாகாணத்திற்கு வெளியே நிருமாணிக்கப்படவுள்ளன. திருகோணமலை கைத்தொழில் பேட்டையின் (கட்டம் 1) அபிவிருத்தி வேலைகள் நிறைவடைந்துள்ளதுடன் 5 கைத்தொழில்கள் வர்த்தக ரீதியான உற்பத்தியில் ஈடுபட்டு 875 தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ள வேளையில், இன்னும் 2 கட்டுமானத்தின் கீழ் இருக்கின்றன. திருகோணமலைக் கைத்தொழில் பேட்டையின் கட்டம் II தற்பொழுது நடைபெற்று வருகின்றது. அதேவேளை, மன்னார் கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி வேலைகள் 2014இல் நிறைவடைந்துள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் திராய்மடுவில் கைத்தொழில் பேட்டையினை நிறுவது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மன்னார் கைத்தொழில் பேட்டையில் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட 2 ஆடைத் தொழிற்சாலைகள் ரூ.506 மில்லியன் முதலீட்டுடன் வர்த்தக ரீதியான உற்பத்தியைத் தொடங்கியுள்ளதுடன் இன்னொரு தொழிற்சாலை மீன் உணவு மற்றும் மீன் எண்ணெய் தயாரிப்பதற்கான பொறிகளைப் பொருத்தும் வேலைகளை ஆரம்பித்துள்ளது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு கிழக்கு மாகாணத்தில் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக ஆடைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் பொருட்டு அம்பாறை நவகம்புர கைத்தொழில் பேட்டையில் 3 தொழிற்சாலைக் கட்டடங்களை நிருமாணிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு திட்டமிட்டுள்ளது. கைத்தொழில் வர்த்தக அமைச்சு 10 ஆடைத் தொழிற்சாலைகளை நிருமாணிப்பதன் மூலம் ஆடைத்தொழிற்சாலைகளுக்காக தனியான கைத்தொழில் வலையமைப்புக்களை நிறுவுவதற்காக வெலி ஓயாவிலும் முசலியிலும் 2 பிரத்தியேகக் கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்காக நிறுவன ரீதியான வசதிகள் 2014இலும் தொடர்ந்தும் வழங்கப்பட்டன.** மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு வியாபார அபிவிருத்திப் பணிகளை வழங்குவதற்காக பொருத்தமான பொறிமுறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட தொழில்முயற்சி அரங்கம் மற்றும் பிரதேச தொழில் முயற்சி அரங்கம் என்பன இவ்வாண்டிலும் தொடர்ந்தன. கிராம மட்டத்தில் வியாபாரத்தினை ஊக்குவிக்கும் நோக்குடன் "கமட்ட ஒபின்ன விஜ்ஜவற" இன் ஊடாக ஆற்றல் வாய்ந்ததும் போட்டித்தன்மை வாய்ந்ததுமான வியாபார வாய்ப்புக்கள் மற்றும் போட்டித்தன்மை மிக்க வியாபாரத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் பிரச்சனைகள் என்பனவற்றை அடையாளம் காண்பதற்காக தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அம்பாந்தோட்டையிலும் வவுனியா மாவட்டங்களிலும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தது. பட்டதாரிகளின் தொழில்முயற்சியாண்மைத் தேர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்காக பல்கலைக்கழகங்களின் தொழில் வழிகாட்டல் பிரிவுகளின் ஆதரவுடன் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்காக சிறப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. தொழில்முயற்சியாண்மைத் தேர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் நிதியியல் வசதிகளையும் புதிய தொழில்நுட்ப வியாபாரத்தினையும் வழங்குவதற்காகவும் தொழில் பயிற்சி பயிலுநர்களுக்காக தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கைவினை, கைத்தறி மற்றும் இலகு பொறியியல் கைத்தொழில்களை உள்ளடக்கிய பல தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைக்கிடுவதற்குத் திட்டமிட்டிருக்கிறது. மேலும், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கைத்தறிக் கிராமங்கள் நிறுவப்படவுள்ளன. சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறையிலுள்ள பிரச்சனைகளைக் கண்டறிவதற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை "இஜ்சு ராக்கொ" என்ற பெயரிலான, தொழில்நுட்பக் கருவியொன்றினை மென்பொருள் பொதியொன்றாக விருத்தி செய்துள்ளது. இதன் மூலம் பிரதேச மட்டத்தில் பல்வேறுபட்ட தொழில்முயற்சி அரங்கங்களிலிருந்து தோன்றுகின்ற தடப் பிரச்சனைகளுக்கு வசதியளிக்கப்படுகின்றது.

**கைத்தொழில் உற்பத்தி, உற்பத்தியாக்கம் என்பனவற்றை உத்வேகப்படுத்துவதற்காகவும் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்காகவும் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகள்**

**மேற்கொள்ளப்பட்டன.** அரசாங்கத்திற்குச் சொந்தமான முதலாவது தொழில்முயற்சியான பல்நோக்கு காம்மா கதிர்வீச்சு வசதியுடன் கூடிய சிறிலங்கன் காம்மா நிலையம் 2014இல் பியகமவில் நிறுவப்பட்டது. இவ்வசதியானது லேட்ரெக்ஸ் கையுறை, வேளாண்மை உற்பத்திகள், உணவு, வாசனைத்திரவியங்கள் மற்றும் கிருமி நீக்கல் தேவைப்படும் ஏனைய ஏற்றுமதி உற்பத்திகள் போன்ற கைத்தொழில் உற்பத்திகளுக்காக கதிர்வீச்சுப் பணிகள் வழங்கப்படும். இது மருத்துவம் மற்றும் வேளாண்மை உள்ளடங்கலான பல துறைகளின் மேம்பாடுகளுக்கு ஆதரவளிப்பதுடன் உள்நாட்டு உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையினை விரிவாக்குவதற்கும் உதவுகிறது. மேலும், இப்பணியினை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பயன்படுத்திய வெளிநாட்டுச் செலாவணியையும் இது பாதுகாக்கும். கட்டுமானம், பாரிய பொறித் தொகுதிகள், கப்பல்கட்டல், வானூர்தித் தொழில்துறை போன்ற கைத்தொழில்களுக்கு அழிவிற்கெதிரான பரீட்சிப்புப் பணிகளை வழங்குவதற்காக சிறப்பு நிறுவனமொன்றின் தேவையை கருத்திற் கொண்டு தேசிய அழிவுக்கெதிராக பரீட்சிப்பு நிலையம் களணியில் நிறுவப்பட்டது. கைத்தொழில் கூறுகள், பொருந்துகைகள் மற்றும் கட்டமைப்புக்களின் தரம், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதன் மூலம் இவ்வசதியானது கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும். தேசிய நனோ தொழில்நுட்பவியல் முன்னெடுப்புக்களின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் தொழில்நுட்ப பாதுகாப்பு நிலையத்தின் கட்டுமான வேலைகளை ஆரம்பித்தன. இக்கட்டுமானத்திற்கான நிதி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்டதுடன் இது கட்டுமான வேலைகளை 2015 செத்தெம்பரில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கிறது. இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகமும் செயற்கைச் சேதன இரசாயன நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்கியுள்ளதுடன் தற்பொழுது இறக்குமதி செய்யப்படுகின்ற செயற்படு மருந்தாக்கல் சுவையூட்டிகளைத் தயாரிப்பதற்கு எண்ணியுள்ளது. அத்துடன் இலங்கை இல்மனைட்டை டைட்டேனியம் ஈரொக்சைட்டிற்கு மாற்றுகின்ற முன்னோடிப் பொறித் தொகுதியொன்று இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகத்தினால் உருவாக்கப்பட்டது.

**ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வர்த்தக பொருட்காட்சிகள், கண்காட்சிகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி சந்தை சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக ஏனைய பல்வேறு நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்திருக்கிறது.** இறப்பர் கைத்தொழிலிலுள்ள புகழ்பெற்ற பன்னாட்டு முன்னணியாளர்கள் மற்றும் இலங்கையின் இறப்பர் தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் முதற்றடவையாக உலகளாவிய இறப்பர் மாநாடு இலங்கையில் நடத்தப்பட்டது. இம்மாநாடானது, தற்போதைய போக்குகளை இற்றைப்படுத்திக் கொள்ளவும் கைத்தொழிலினால் எதிர்நோக்கப்படும் எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கும் வர்த்தகத் தொழிற்பாட்டாளர்களுக்கும் வசதியளித்தது. முதலாவது இலங்கையின் பன்னாட்டு அலங்கார மீன் வளர்ப்பு வர்த்தக மாநாடு 300 இற்கு மேற்பட்ட உள்ளூர் மற்றும் பன்னாட்டு தூதுக்குழுக்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது. இம்மாநாடானது, உயர்மட்ட உலக மீன் வளர்ப்பு நிபுணர்களும் ஏற்றுமதியாளர்களும் தென்னாசியாவில் முதற்றடவையாக ஒரு இடத்தில் ஒன்று கூடுவதனை இயலச் செய்தது.

**கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கான ஆதரவு 2015ஆம் ஆண்டிற்கான உள்நாட்டுக் கைத்தொழில்களையும் உள்நாட்டு உற்பத்தி/பெறுமதி கூட்டல்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளையும் உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டத்திற்கான முன்மொழிவுகளுடன் மேலும் வலுவடைந்தது.** உயர்ந்த உள்ளீட்டுச் செலவுகளைக் குறைப்பதற்காகவும் கட்டுமானக் கைத்தொழிலை உயர்விப்பதற்காகவும் சிமெந்து மற்றும் உருக்குக் கம்பிகளுக்கு பிரயோகிக்கத்தக்க சுங்கத் தீர்வை அகற்றப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியையும் உள்நாட்டு பெறுமதிகூட்டலையும் ஊக்குவிப்பதற்காக உந்துஈருருளிகள் மற்றும் முச்சில்லு தயாரிப்பு/ உடற்கோப்பு என்பனவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்கள் மீதான வரிகள் முழுமையாக அகற்றப்பட்டன. நாட்டில் காய்கறிகள் மற்றும் உணவு பதனிடல் கைத்தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு இத்துறையில் வியாபாரத்தினைத் தொடங்குகின்ற தொழில் முயற்சியாண்மையாளர்களுக்காக 50 சதவீத வரிக் குறைப்பு முன்மொழியப்பட்டது. உள்நாட்டு கட்டுமானக் கம்பனிகள் அவற்றின் செயற்பாடுகளை வெளிநாடுகளில் விரிவாக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு, அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து உழைக்கின்ற இலாபங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அதேவேளை, 2014 நவெம்பர் வரவு செலவுத்திட்டம், ஏற்றுமதி தொடர்பான கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான பல முன்மொழிவுகளைக் கொண்டிருந்தது. இது ரூ.500 மில்லியனுக்கும் கூடுதலான புதிய முதலீடுகளை மேற்கொள்கின்ற முதலீட்டாளர்களுக்கான 7 ஆண்டுகளுக்கான அரை வரி விடுப்பு போன்ற ஒரு சில வரிச் சலுகைகளுடன் சேர்த்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் போட்டித்தன்மை கொண்ட கைத்தொழிலுக்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 300 வரையிலான தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதனை

உள்ளடக்குகிறது. இவ்வழிமுறைகள் உள்நாட்டுக் கைத்தொழில் துறையின் செயலாற்றத்தினை உத்வேகப்படுத்தும் எனவும் தேசிய உற்பத்திக்கு பங்களிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### குடிசைக் கைத்தொழில்

**குடிசைக் கைத்தொழில் துணைத்துறை 2013இன் 5.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 2.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இத்துணைத் துறையானது குடிசைக் கைத்தொழில்களுக்கான இயலளவு அபிவிருத்தி, தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி, நிதிகளைப் பெறும் வசதிகள், சந்தை வசதிகள் போன்ற துறைகளில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் சம்மேளனம் போன்ற நிறுவனங்களினால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்களிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. பன்னாட்டுச் சந்தைகளின் கேள்விக்கேற்ப தனிச்சிறப்பு வாய்ந்ததும் தரமானதுமான உற்பத்திகளை வழங்குவதற்காக கைத்தறி புடவை நெசவு நிலையங்களைத் தரமுயர்த்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள் இத்துணைத் துறையின் வளர்ச்சிக்கு உதவியளித்தன. அதேவேளை, பனை அபிவிருத்திச் சபை நவீன தொழில்நுட்பவியல் பாவனையை ஊக்குவிப்பதற்காக பொறிகள் மற்றும் ஏனைய கருவிகள் மற்றும் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் பனைக் கைத்தொழில்களின் தரத்தினை உயர்த்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகள் கட்டுமானம் மற்றும் சுற்றுலாத் துணைத் துறைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியுடன் சேர்ந்து இத்துணைத் துறையிடையேயான வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களித்தது.

### மின்வலு, வாயு மற்றும் நீர்

**மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத் துறை 2013இன் 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 4.5 சதவீதத்தினால் விரிவடைந்தது.** இத் துணைத்துறைக்குள் பெரும் பங்கிற்கு வகைகூறும் மின்வலு முன்னைய ஆண்டின் 11.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. குறிப்பாக, ஆண்டின் முதலரைப் பகுதியில் நீரேந்துப் பரப்புக்களில் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகளின் காரணமாக உயர் பெறுமதிகூட்டப்பட்ட நீர்மின்வலுவின் உருவாக்கம் 34.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமை மின்வலுத் துணைத் துறையில் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சியைக் குறைத்தது. அதேவேளை, உயர்ந்த உள்ளீட்டுச் செலவின் காரணமாக நீர்மின்வலு உருவாக்கத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த பெறுமதிகூட்டலைக் கொண்ட வெப்பத்தினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் 58.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், மற்றைய வெப்பவலு உருவாக்கங்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் செலவுச் சிக்கனமான லக்விஜய நிலக்கரி வலு முறையின் இரண்டாம் கட்டம் தேசிய மின்தொகுதியுடன் சேர்க்கப்பட்டமையானது ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் இத்துணைத் துறையின் வளர்ச்சிக்குச் சாதகமாக உதவியது. அதேவேளை, வாயு துணைத் துறை 2013இன் 1.6 சதவீத வளர்ச்சியை விட 9.3 சதவீதத்தினால் விரிவடைந்தது. இது, 2013இன் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அளவு நியதிகளில் மொத்த வாயு விற்பனையில் ஏற்பட்ட 6.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை, நீர்த் துணைத் துறை 2013இன் 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 5.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வகையானது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட நீரின் அளவில் ஏற்பட்ட 9.0 சதவீத அதிகரிப்பினால் பெருமளவிற்குப் பிரதிபலிக்கப்பட்டது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நுகர்வோர் கணக்குகளின் எண்ணிக்கையும் 2014இல் 7.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

### கட்டடவாக்கம்

**கட்டடவாக்கத் துணைத் துறை 2013 காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 14.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 20.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தது.** கட்டடவாக்க துணைத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் செய்யப்பட்ட அதிகரித்த அரச முதலீடுகளினால் பிரதிபலிக்கப்பட்டது. தென்பகுதி விரைவுப்பாதையின் கட்டம் II, கொழும்பு வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலையின் கட்டம் I மற்றும் கட்டம் II, யாழ்ப்பாணம் வரையிலான வடபகுதி புகைவண்டிப்பாதை மற்றும் பல்நோக்கு தெதுறுஓயா நீர்த்தேக்கச் செயற்றிட்டம் என்பன இக்காலப்பகுதியில் செயற்பாட்டிலிருந்த செயற்றிட்டங்களாகும். மேலும், தற்காலிக அமைவிடயங்களில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்கான அரச துறை வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பன இவ்வாண்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. கட்டடவாக்கத் துறையில் தனியார் துறையின் ஈடுபாடுகள் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2013இன் 16.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஏற்பட்ட 22.3 சதவீத வளர்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை, வர்த்தக வங்கிகளினால் தனியாள் வீடமைப்பிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2013இன் 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 28.7 சதவீதத்தினால் அதிகரித்து தனியாள் வீடமைப்புக் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட

அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. மேலும், சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் மற்றும் தொடர்மாடி மனைக் கட்டடத்தொகுதி போன்ற பாரியளவு தனியாள் கட்டடவாக்க நடவடிக்கைகளும் கட்டடவாக்க துணைத் துறையின் வளர்ச்சிக்குப் பங்களித்தன.

### பணிகள்

**மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 57.6 சதவீத பங்கினையுடைய பொருளாதாரத்தின் பாரிய துறையான பணிகள் துறை 2013இல் பதிவு செய்யப்பட்ட 6.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 6.5 சதவீதமாக வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சி உள்நாட்டு வர்த்தகத்துடன் இணைந்து இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளில் வளர்ச்சியில் பாரியளவில் வகைகூறும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை துணைத்துறையின் விரிவாக்கத்தினால் பங்களிப்புச் செய்யப்பட்டது. மேலும், வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் மெய்யாதனத் துணைத்துறைகளும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தன. ஆண்டுக்காலப்பகுதியில் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத்துறைகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு எடுத்துக்காட்டப்பட்டதுடன் துறைவாரியான வளர்ச்சிக்கும் துணைபுரிந்தது. மேலும், சுற்றுலாவிடுதி மற்றும் உணவகங்கள் துணைத்துறை 2013 உடன் ஒப்பிடுகையில் குறைவான வீதத்தில் துணைத்துறை வளர்ச்சியடைந்த போதும் ஆண்டுப்பகுதியில் செழிப்பான செயலாற்றத்தைக் காட்டியது. அதேவேளை, 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் அரச மற்றும் தனியார் பணிகள் மெதுவடைந்தன.

### மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்

**பணிகள் துறையின் 39.5 சதவீதத்திற்கு வகைகூறும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக துணைத்துறை 2013இன் 5.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 8.0 சதவீத வளர்ச்சியை பதிவு செய்தது.** 2013உடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வர்த்தக துணைத்துறை குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்த போதும் ஆண்டுக்காலப்பகுதியில் பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் இறக்குமதி வர்த்தக துணைத்துறை செழிப்பான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, உள்நாட்டு வர்த்தக துணைத்துறை நேர்க்கணிய உத்வேகத்தை 2014இலும் தொடர்ந்ததுடன் வர்த்தக நடவடிக்கைகளில் வளர்ச்சியைத் தூண்டியது.

**இறக்குமதி வர்த்தக துணைத்துறை 2013இல் பதிவு செய்த 2.9 சதவீத மெதுவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 9.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இப் புத்துயிர்ப்பானது இறக்குமதி அளவுச் சுட்டெண் 2013இல் அனுபவித்த 1.5 சதவீத குறைப்புடன் ஒப்பிடுகையில் 2014இன் 9.5 சதவீத வளர்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டது. இதன்படி, உணவு மற்றும் குடிபானம் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களின் அதிகரித்த கேள்வியின் காரணமாக நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 2013இன் 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டுப் பகுதியில் 20.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தது. ஏனைய நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியின் வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்பாளராக வாகன இறக்குமதியில் அவதானிக்கப்பட்ட எழுச்சியே காரணமாகும். மேலும் இறக்குமதி அளவின் பாரிய பங்களிப்பாளரான இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி 2013இன் 6.1 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2014இல் 10.6 சதவீதமாக உயர்வடைந்தது. இதற்கு 2013இல் வீழ்ச்சியடைந்த இரண்டு பாரிய இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளை பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் புடவை மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதிகள் மீள் உத்வேகத்தை அடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், போக்குவரத்து கருவிகளின் இறக்குமதிகள் மீள் உத்வேகத்தை அடைந்த போதும் முதலீட்டு பொருட்களின் இரு முக்கிய பிரிவுகளான பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் சுருக்கமடைந்தமை முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 2013இன் 1.0 சதவீத்ததுடன் ஒப்பிடுகையில் 0.3 சதவீதத்தினால் சிறிதளவால் வளர்ச்சியடைந்தமைக்கு முக்கிய காரணமாகும்.

**ஏற்றுமதி வர்த்தக துணைத்துறை 2013இன் 6.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 4.6 சதவீத்தினால் வளர்ச்சியடைந்தது.** முதலாம் காலாண்டில் ஏற்றுமதி வர்த்தக துணைத்துறை உயர்வீதத்தில் வளர்ச்சியடைந்ததுடன் அதனைத் தொடர்ந்து வரும் காலாண்டுப் பகுதியில் இசைந்து தொடர்ச்சியாக மிதமடைந்தது. 2013இன் 6.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த ஏற்றுதி அளவுச் சுட்டெண் 2014 காலப்பகுதியில் 4.3 சதவீதத்திற்கு மெதுவடந்தமைக்கு ஆண்டின் நான்காம் காலாண்டில் அவதானிக்கப்பட்ட சுருக்கமே முக்கிய காரணமாகும். நாட்டின் பொருட்களின் ஏற்றுமதி பிரதான பங்களிப்பினை வழங்கும் கைத்தொழில் ஏற்றுமதிகள் 2013இன் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்காலப்பகுதியில் 3.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நான்காம் காலாண்டில் அவதானிக்கப்பட்ட சுருக்கத்திற்கு வகைகூறிய புடவை மற்றும் ஆடைகள் ஏற்றுமதியில் ஏற்பட்ட மெதுவடைவே இதற்கு பிரதான காரணமாகும். அதேநேரம், வேளாண்மை ஏற்றுமதி அளவுகளின் வளர்ச்சி முன்னைய ஆண்டில் காணப்பட்ட அதே மட்டத்தில் காணப்பட்டது. தெங்கு மற்றும் தேயிலை ஏற்றுமதி 2014இல் உயர் வளர்ச்சியை பதிவு செய்திருந்த அதேவேளை அளவு நியதிகளில் இறப்பர் ஏற்றுமதி தொடர்ச்சியாக சுருக்கமடைந்தது. எனினும், கனிப்பொருள் ஏற்றுமதி அளவுகள் முன்னைய ஆண்டின் சுருக்கத்திற்கு மாறாக 2014இற்குள் மீட்சி பெற்றிருந்தது.

மொத்த மற்றும் சில்லறை வியாபார துணைத்துறையில் பாரிய துணைத்துறையான **உள்நாட்டு வர்த்தக துணைத்துறை 2013இன் 6.9 சதவீதத்திலிருந்து 2014இல் 8.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சியானது குறைந்தளவான வட்டி வீதங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த வருமான மட்டங்கள் என்பவற்றால் ஊக்கமளிக்கப்பட்ட முன்னேற்றமடைந்த நுகர்வோர் கேள்வியினால் பாரியளவிற்கு செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2014இல் அவதானிக்கப்பட்டிருந்த உயர்ந்த கைத்தொழில் உற்பத்திகள் உள்நாட்டு வர்த்தக துணைத்துறையின் தொடர்ச்சியான வளர்ச்சியை நோக்கி நிரம்பல் பக்க தூண்டுதல்களை வழங்கியிருந்தது. அதேவேளை, சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு பருவகாலங்களில் நெல் உற்பத்தியானது கணிசமானளவு சுருக்கமடைந்த போதும் மலைநாட்டுப் பயிர்கள் மற்றும் மரக்கறிகளின் கணிசமான வளர்ச்சியும் இவ்வளர்ச்சிக்கு துணைபுரிந்தது. மேலும், வீதி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்புக்களின் அபிவிருத்தி வர்த்தக தொடர்புகளை வசதிப்படுத்தியிருந்ததுடன் அதனூடாக உள்நாட்டு வர்த்தக துணைத்துறையில் பெறுமதி சேகரிப்பதற்கு துணைபுரிந்திருந்தது.

## உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள்

**உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் துணைத்துறை 2013இன் 22.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 11.5 சதவீதம் என்ற மெதுவான வேகத்தில் விரிவாக்கமடைந்திருந்தது.** 2013இல் 26.7 சதவீதம் வளர்ச்சியடைந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2014இல் 19.8 சதவீதத்திற்கு மெதுவடைந்திருந்தது. எனினும், பன்னாட்டு பிரயாண வருகைகளின்படி, இது ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் உலகம் முழுவதற்குமான 2014ஆம் ஆண்டிற்கான 4.7 சதவீத வளர்ச்சி மதிப்பீடகளுக்கும் தென்னாசியாவிற்கான 7.1 சதவீத வளர்ச்சிக்கும் மேலாகக் காணப்பட்டது. மேலும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடப்பட்ட உணவக தாபனங்களின் அறைகளின் பாவனை வீதம் கடந்த வருடத்தின் 71.7 சதவீதத்திலிருந்து 2014இல் 74.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, ஆண்டின் இறுதி முடிவில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 2 பில்லியனை கடந்ததுடன் 41.7 சதவீதம் என்ற வருடாந்த வளர்ச்சியை பதிவு செய்தது. எனினும், இத்துணைத்துறையில் உயர் பெறுமதி சேர்ப்பினை பேணுவதற்கு உயர்தரத்திலான பயணிகளை கவர வேண்டியது அவசியமானதாகும்.

## போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்

**போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத்துறை 2013இன் 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடமிடத்து 2014இல் 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து போக்குவரத்து மற்றும் தபால் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத்துறைகளின் மெதுவடைவானது இத்துணைத்துறையின் வளர்ச்சியை தளர்வடையச் செய்திருந்தது. எனினும், சரக்கு கையாளல் - துறைமுகங்கள் மற்றும் வான் போக்குவரத்து துணைத்துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் சீரமைப்புக்கு இணங்க வளர்ச்சியடைந்திருந்தது.

**போக்குவரத்து துணைத்துறை 2013இன் 9.4 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2014 காலப்பகுதியில் 7.3 சதவீத்தால் விரிவாக்கப்பட்டிருந்தது.** போக்குவரத்து துணைத்துறையின் முக்கிய பங்களிப்பாளரான பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்துத் துணைத்துறை முன்னைய ஆண்டின் 9.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சார்பு ரீதியில் குறைந்த வீதமான 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது. இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் நடாத்துனர்களால் செயற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர்களின் மொத்த எண்ணிக்கை 2013இல் பதிவு செய்யப்பட்டிருந்த 2.5 சதவீத மற்றும் 2.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே 4.1 சதவீதம் மற்றும் 8.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேவேளை, புகையிரத போக்குவரத்து துணைத்துறை 4.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது 2013இன் 2.2 சதவீத வளர்ச்சிக்கு மேலானதாகும். இலங்கை புகையிரதத்தினால் செயற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர் ஆண்டு காலப்பகுதியில் 9.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், இலங்கை புகையிரதத்தினால் போக்குவரத்து செய்யப்பட்ட சரக்குத் தொன் கிலோ மீற்றர் 2014 காலப்பகுதியில் மீட்சி பெற்றதுடன் முன்னைய ஆண்டின் 7.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுமிடத்து 13.2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. வடக்கு புகையிரத சேவையின் தொழிற்பாடுகள் ஆண்டு காலப்பகுதியில் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன், புகையிரத வலைப்பின்னலை மேலும் விரிவாக்கியது. எனினும், மிகின் லங்கா மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் என்பவற்றால் இணைந்து பறக்கப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர்கள் 2013இல் பதிவு செய்யப்பட்ட 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீத்தால் சுருக்கமடைந்தது. மேலும், சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிகின் லங்காவால் பறக்கப்பட்ட வான் கிலோ மீற்றர் 2013இன் 0.7 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2014 காலப்பகுதியில் 1.0 சதவீததால் சுருக்கமடைந்திருந்தது. எனினும், உள்நாட்டு வானூர்தி நடாத்துனர்களால் பறக்கப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர்கள் ஆண்டுக் காலப்பகுதியில் கணிசமாக வளர்ச்சியடைந்து துறைக்கான அதனது நேர்க்கணிய பங்களிப்பை தொடர்ந்தது.

**சரக்கு கையாளல் துறைமுகங்களும் வான் போக்குவரத்து துணைத்துறை 2013இன் 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 காலப்பகுதியில் 4.0 சதவீத்தால் வளர்ச்சியடைந்தது.**

இவ்வளர்ச்சியானது ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் மீட்சியினால் பாரியளவிற்கு காரணமாயிருந்தது. அதன்படி, இலங்கை துறைமுக அதிகார சபை, தென்னாசிய நுழைவாயில் முனைவுக்கோடி மற்றும் கொழும்பு பன்னாட்டு கொள்கலன் முனைவுக்கோடி என்பவற்றால் இணைந்து கையாளப்பட்ட இருபது அடி சமப்படுத்தல் அலகுகளின் நியதிகளில் கொள்கலன் செய்வீதம் மற்றும் மீளடுக்கல் நீங்கலாக தோணிமாற்றியேற்றல் அளவுகள் 2013இல் 3.8 சதவீதம் என்ற மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்காலப்பகுதியில் 13.8 சதவீத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. மேலும், இலங்கை துறைமுகங்களினால் கையாளப்பட்ட சரக்கு கப்பலின் கொள்ளளவு 2013இல் 2.0 சதவீத்தால் சிறிதளவாக வளர்ச்சியடைந்ததுடன் 2014 காலப்பகுதியில் 12.3 சதவீதம் என்ற உயர்ந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினால் கையாளப்படும் விமானச் சரக்கு கப்பலின் கொள்ளளவு ஆண்டுகாலப்பகுதியில் சிறிதளவால் அதிகரித்திருந்தது.

**தபால் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத்துறை 2013இன் 11.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** நிலையான இணைப்புள்ள கம்பியல்லா இணைப்புக்களின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு மத்தியில் நிலையான இணைப்புள்ள கம்பியுள்ள வாடிக்கையாளர்களின் அதிகரிப்புகளுடன் இணைந்ததான செல்லிடத் தொலைபேசி வாடிக்கையாளர்களின் அதிகரிப்பினால் நாட்டின் தொலைபேசி அடர்த்தியானது 2013 திசெம்பர் இறுதியில் 100 நபர்களுக்கு 112.4 இலிருந்து 2014 திசெம்பர் இறுதியில் 100 நபர்களுக்கு 120இற்கு அதிகரிப்பதற்கு வழிநடத்தியிருந்தது. மேலும், தரவுத் தொடர்பு சேவைகளுக்கான கேள்வியினை வெளிப்படுத்தி நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசியினூடான தொடர்பூட்டல் ஆகிய இரண்டிலுமான அகலப்பட்டை தரவுப் பயன்பாடானது செல்லிட அகலப்பட்டை தொடர்புகளின் உயர்ந்தளவான வளர்ச்சியிலிருந்தான நன்மையிலிருந்து தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்தது. திறந்த மூல மேடைகளினூடான தட்டிகை கருவிகளின் மிகவும் பிரபல்யத்தன்மையான மூன்றாம் நபர் செல்லிட பயன்பாட்டினை நிறைவேற்றியதுடன் செல்லிடக் கொடுப்பனவு முறைமை, செல்லிட வங்கித்தொழில், சமூக இணைப்புக்கள் போன்றவாறான பயன்பாடுகளை கவர்ந்திருந்ததுடன் தரவுப் பயன்பாட்டில் இவ்வாறான உயர்வு கணிசமாக துணைபுரிந்தது. அதேவேளை, கையாளப்பட்ட வெளிநாட்டு அஞ்சல்கள் மற்றும் பொதிகள் சுருக்கமடைந்திருந்த போதிலும் கையாளப்பட்ட உள்ளக அஞ்சல்கள் மற்றும் பொதிகளின் அதிகரிப்பினால் வெளிப்படுத்தப்பட்ட தபால் சேவைகளும் துணைத்துறைக்கு அதனது பங்களிப்பை தொடர்ந்தது.

## வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் மெய் ஆதனம்

**வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் மெய் ஆதன துணைத்துறை 2013இன் 5.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 6.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** துணைத்துறை முதல் அரைவாசிப் பகுதியில் மிகுதியான கட்டுப்படுத்தப்பட்ட செயலாற்றத்தை பதிவு செய்திருந்த போதிலும் ஆண்டின் இரண்டாவது அரைவாசியில் செழிப்பான வீதத்தில் விரிவடைந்திருந்தது. வங்கித்தொழில் துறை 2013இன் 9.8 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2014இல் தேறிய இலாபத்தில் 17.9 சதவீதமாக அதிகரித்தது. அதன்படி வங்கித் தொழில் பங்கு மூலதனத்தின் மீதான வருவாய் 2013இன் 16 சதவீதத்திலிருந்து 2014இல் 16.5 சதவீதத்திற்கு முன்னேற்றமடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்த வியாபார நடவடிக்கைகளை வெளிப்படுத்தி வங்கித்தொழில் துறையின் தேறிய கடன்கள் மற்றும் முற்பண சொத்துப்பட்டியலானது 2013 இறுதியின் 8.8 சதவீத வளர்ச்சியை பார்க்கிலும் 2014 இறுதியில் 13.7 சதவீதத்தினால் முன்னேற்றம் அடைந்தது. அதேவேளை, அதிகரித்த இலாபத்தின் துணையினால் இலாப மட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தி 2013 உடன் ஒப்பிடுமிடத்து வங்கியல்லா நிதியியல் துறையும் சிறந்த செயலாற்றத்தை பதிவு செய்திருந்தது. எனினும், கட்டுப்பணம் மற்றும் முதலீட்டு வருமானத்தின் அதிகரிப்புக்கு மத்தியிலும் இடம்பெற்ற பெறுகைகளின் வளர்ச்சியின் பிரதான காரணத்தினால் காப்புறுதிக் கைத்தொழிலின் வரிக்கு முன்னரான இலாபம் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வட்டி வீதங்களின் தொடர்ச்சியான வீழ்ச்சியினால் ஊக்கமளிக்கப்பட்டு மெய் ஆதன வியாபாரங்கள் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த செயலாற்றத்தைக் காட்டியிருந்தது.

## அரச பணிகள்

**அரச பணிகள் துணைத்துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014 இல் 1.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலை ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் முதலாம் நிலை ஊழியர்களின் பெறுமதி கூட்டலின் குறைந்த மட்டம் ஓர் உயர்ந்த வீதத்தில் அதிகரிக்கப்பட்டமை அரச துறைத் தொழில் நிலைகளின் அதிகரிப்பால் இது பிரதிபலிக்கப்பட்டது.

## தனியார் பணிகள்

**தனியார் பணிகளின் துணைத் துறைகளின் பெறுமதி கூட்டலின் வளர்ச்சி 2013 இன் 7.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 காலப்பகுதியில் 5.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** கேள்வி உருவாக்கப்படுகின்ற சில பணிகளுக்கான செலவிடத்தக்க வருமானம் உயர்வடைந்துள்ளதுடன் இணைந்து தனியார் பணிகளின் முக்கியத்துவம் பல வருடங்களாக

உயர்வடைந்தது. புகைப்படம், அழகுப் பராமரிப்பு மற்றும் பொழுது போக்குகள் என்பன கேள்வியிலும் மற்றும் உள்நாட்டு அலுவலர் பணிகள் நடவடிக்கைகளிலும் கூடிய முறைமைப்படுத்தப்பட்ட ஒரு துணிகரத்தை அடைந்தன. இதற்கு மேலாக தனியார் கல்வி போன்ற சேவைகள் முன்பள்ளியிலிருந்து கல்வியில் அநேகமாக அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய பட்டப்பின் படிப்பு தகைமைகளுக்காக அதன் நோக்கம் அதிகரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் வெறும் தனியார் வகுப்புக்களிலிருந்து தனியார் பல்கலைக்கழக மட்டங்களுக்கான மாற்றம் ஒன்றினைப் பெற்றுள்ளன. மேலும் அதிகரிக்கப்பட்ட கேள்வியுடன் இணைந்த மருத்துவ சேவைகள் மற்றும் பல அதிநவீன தொழில்நுட்பத்துடன் தொடர்ச்சியாக விரிவடைந்துள்ள துறையாக தனியார் நலன் பாதுகாப்பு பணிகளும் குறிப்பிடத்தக்களவில் பங்களித்துள்ளன.

## 2.4 செலவினம்

**தேறிய ஏற்றுமதிகள் சுருக்கமடைந்துள்ள அதே வேளையில் 2014 காலப்பகுதியில் உண்மை நியதிகளை நுகர்வு மற்றும் முதலீட்டு செலவினம் இரண்டிலுமான வளர்ச்சி தேசிய கணக்குகளின் செலவின அணுகுமுறைகளின் கீழான மதிப்படுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.** கூட்டு நுகர்வு மற்றும் முதலீடுகளை உள்ளடக்கியுள்ள மொத்த உள்நாட்டு செலவினம் 2013 இன் 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. இது, 2014ஆம் ஆண்டுப் பகுதியில் உண்மை நியதிகளில் முதலீட்டுச் செலவினம் 11.5 சதவீதத்தினாலும் நுகர்வுச் செலவினம் 7.6 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தமையின் இணைந்த விளைவாகும். தனியார் முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் அரச முதலீட்டு செலவின அதிகரிப்பு என்பவற்றினாலேயே முதலீட்டு செலவின அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதேவேளையில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சியால் நுகர்வு செலவினத்தின் வளர்ச்சி பிரதிபலிக்கப்பட்டுள்ளது. மேலும் குறைந்தளவிலான உள்நாட்டு வட்டி வீதங்களும் செலவிடத்தக்க வருமானத்தின் அதிகரிப்பும் நுகர்வினை ஊக்கப்படுத்தியுள்ளன. எனினும், ஒப்பீட்டு ரீதியில் இறக்குமதிகளின் உயர் வளர்ச்சியால் 2014இல் உண்மை நியதிகளில் தேறிய ஏற்றுமதிகள் 21.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதிகளின் அதிகரிப்பு முக்கியமாக நுகர்வு மற்றும் இடைநிலைப் பொருட்களின் பேரில் ஏற்பட்டுள்ளது. பன்னாட்டு பொருட்களின் விலைகளிலான வீழ்ச்சியால் பிரதிபலிக்கப்படுகின்ற குறைந்த உலகளாவிய கேள்வியால் ஏற்றுமதி செயலாற்றம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அபிவிருத்திகளின் ஒன்று சேர்த்த வெளியீடுகளால் உண்மை நியதிகளில் மொ.உ.உற்பத்தி மீதான செலவினம் மொ.உ.செலவினங்களின் 8.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.4 சதவீதமான ஒரு குறைந்த வளர்ச்சியினை 2014இல் குறித்துள்ளது. பெயரளவு நியதிகளில் மொ.உ.உற்பத்தி மீதான செலவினங்களின் வளர்ச்சியைக் கருத்திற் கொள்ளும் போது 2013இல் பதிவு செய்யப்பட்ட 14.5 சதவீத வளர்ச்சியில் இருந்து 12.8 சதவீதமாக குறைந்துள்ளது. உள்ளார்ந்த மொ.உ.உற்பத்தி சுருக்கியின் 2013இன் 6.7 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமான வீழ்ச்சி இந்த குறைவிற்கு பங்களிப்புச் செய்தது. அந்த வகையில் பெயரளவு நியதிகளில் மொ.உ.உற்பத்தி 2013இன் ரூ.8,674 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ரூ.9,785 பில்லியனாக 2014இல் மதிப்பிடப்பட்டுள்ளது.

### நுகர்வு

**செலவினத்தின் முக்கிய கூறாகிய நுகர்வு செலவினம் பெயரளவு நியதிகளில் 2013இல் பதிவு செய்யப்பட்ட 10.2 சதவீத வளர்ச்சிக்கு மேலாக 2014 காலப்பகுதியில் ரூ.7,716 பில்லியனுக்கு 11.2 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது.** எனினும், மொத்த நுகர்வுக்கு பிரதான பங்களிப்பாக விளங்குகின்ற தனியார் நுகர்வு செலவினம் 2014இன் அரச நுகர்வு செலவினத்துடன் ஒப்பிடுமிடத்து குறைவான கட்டத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. அந்தவகையில் மொத்த நுகர்வு செலவில் 82.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ள தனியார் நுகர்வுச் செலவினம் 2014இல் 10.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. அதேவேளையில், அரச நுகர்வு செலவினம் 15.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதுடன் மொத்த நுகர்வுச் செலவினத்தின் 17.1 சதவீதத்தை வகைகூறியது. செலவிடத்தக்க வருமானத்தின் அதிகரிப்புடன் இணைந்த வட்டிவீதத்திலான வீழ்ச்சி தனியார் நுகர்வு நடவடிக்கையின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளது. பெறுமதி மற்றும் அளவுகளின் நியதிகளில் நுகர்வோர்ப் பொருட்களின் இறக்குமதியிலான அதிகரிப்பும் நுகர்வோர் பொருட்களுக்கான கேள்வியின் அதிகரிப்பினைப் பிரதிபலித்துள்ளது.

**தனியார் நுகர்வு செலவினத்தின் முக்கிய பங்களிப்புக்களாக விளங்கும் உணவு, குடிவகை மற்றும் புகையிலை வகைகள் 2013இல் பதிவு செய்யப்பட்ட 7.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014 காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் 5.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.** வருமான மட்டத்தின் அதிகரிப்புடன் உணவு மற்றும் குடிவகைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் செறிவு வீழ்ச்சியடைவதனால் மொத்தத் தனியார் நுகர்வு செலவினம் மீதான இவ்வகையின் பங்கு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது. வருமானம் மற்றும் செலவின அளவீடு 2012/13இற்கமைய மொத்த நுகர்வுச் செலவினத்தின் உணவுக்கான விகிதத்தின் குறைவாலும் இது பிரதிபலிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் உணவு, குடிவகை மற்றும் புகையிலைப் பொருட்களின் பங்கு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 36.9 சதவீத்திலிருந்து 35.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பாதகமான

அட்டவணை 2.8 **கூட்டுக் கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூ.மில்) | | | நிலையான (2002) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 6,295,894 | 6,940,569 | 7,716,177 | 2,555,330 | 2,638,171 | 2,838,734 |
| (% மாற்றம்) | 13.7 | 10.2 | 11.2 | 5.5 | 3.2 | 7.6 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 2,318,253 | 2,560,214 | 2,904,987 | 881,172 | 968,014 | 1,079,593 |
| (% மாற்றம்) | 18.3 | 10.4 | 13.5 | 6.5 | 9.9 | 11.5 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **8,614,147** | **9,500,783** | **10,621,164** | **3,436,502** | **3,606,185** | **3,918,326** |
| **(% மாற்றம்)** | **14.9** | **10.3** | **11.8** | **5.7** | **4.9** | **8.7** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,730,467 | 1,949,158 | 2,185,039 | 804,793 | 852,276 | 894,038 |
| (% மாற்றம்) | 14.7 | 12.6 | 12.1 | 0.2 | 5.9 | 4.9 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 2,766,060 | 2,775,711 | 3,021,530 | 1,196,008 | 1,192,420 | 1,305,700 |
| (% மாற்றம்) | 12.4 | 0.3 | 8.9 | 0.5 | -0.3 | 9.5 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-1,035,593** | **-826,553** | **-836,491** | **-391,215** | **-340,144** | **-411,662** |
| **(% மாற்றம்)** | **-8.8** | **20.2** | **-1.2** | **-1.2** | **13.1** | **-21.0** |
| **இ. மொத்த கேள்வி** | **7,578,554** | **8,674,230** | **9,784,672** | **3,045,288** | **3,266,041** | **3,506,664** |
| **(% மாற்றம்)** | **15.8** | **14.5** | **12.8** | **6.3** | **7.2** | **7.4** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

காலநிலை நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியில் கணிசமான மிதமாக்களின் காரணமாக ஆண்டுகாலத்தின் பெறுமதி மற்றும் அளவு நியதிகள் இரண்டிலும் உணவு மற்றும் குடிவகையின் இறக்குமதிகளில் ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, உடுபுடவை மற்றும் காலணி மீதான செலவு கணிசமாக அதிகரித்தமையானது வாழ்க்கை முறை மாற்றங்களுக்கமைய நுகர்வோர் நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. உடுபுடவை மற்றும் உபகரணங்களின் அளவு மற்றும் பெறுமதி ரீதியான அதிகரிப்பும் கூட இந்தக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பையே காட்டுகின்றது.

**வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவு 2013ஆம் ஆண்டின் 17.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்ததாகிலும் 2014ஆம் ஆண்டில் 13.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** வீட்டுத்துறையின் கேள்வி, வீட்டுத்துறைக்கான மின்வலு, அலகுகள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட நீர் அலகுகள் மற்றும் வீட்டுப்பாவனைக்கான எரிவாயு விற்பனை என்பன இக்காலப்பகுதியில் அதிகரித்தமையைக் கருத்தில் கொள்கையில் அது நுகர்வு அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. எனினும், திரவப் பெற்றோலியம், நீர், மின்வலு மற்றும் எரிவாயு போன்றவற்றின் நிர்வாக ரீதியாக நிர்ணயம் செய்யப்பட்ட விலைகள் வருடத்தின் முதல் எட்டு பாதங்களில் ஒப்பீட்டளவில் தொடர்ச்சியாக நிலைத்திருந்தாலும் வருடத்தின் பிற்பகுதிகளில் கீழ்நோக்கி நிலைப்படுத்தப்பட்டன. இவ்வாறான குறைந்த விலைகள் இவ்வகைகள் மீதான நுகர்வுச் செலவின் மெதுவான பெயரளவு வளர்ச்சிக்கு வழிசமைத்தது. தனியார் துறையின் போக்குவரத்து மீதான நுகர்வுச் செலவு 2013இல் பெயரளவு ரீதியாக பதவான 9.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் குறைவடைந்து 7.7 சதவீத வளர்ச்சியை பதித்தது. இது பிரதானமாக வருட காலப்பகுதியில் பேணப்பட்ட ஒப்பீட்டளவில் நிலைத்திருந்த எரிபொருள் விலைகளிற்கு இசைவாக பேருந்து மற்றும் புகையிரத சேவை போன்ற பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்களின் நிலைத்தன்மையின் பங்களிப்பாலேற்றபட்டதாகும்.

**பெயரளவு நியதிகளில் தனியார் துறையின் போக்குவரத்து மீதான நுகர்வுச் செலவீடு 2013இன் 9.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 7.7 சதவீதத்தால் மெதுவடைவை பதிவு செய்திருந்தது.** இது ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட பயணிகளின் நிலையான பஸ் மற்றும் புகையிரத சேவை கட்டணங்களினால் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் சார்பு ரீதியில் நிலையான எரிபொருள் விலைகளுடன் இசைந்து செல்வதாக இருந்தது.

**நலத்துறை மற்றும் கல்வி மீதான தனியார் துறையின் நுகர்வு செலவினம் பெயரளவு நியதிகளில், 2013இல் பதிவு செய்யப்பட்ட முறையான வீதங்களான 11.0 சதவீதம் 26.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையின் 2014இல் முறையே 11.6 சதவீதம் மற்றும் 30.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.** தனியார் நலம் மற்றும் கல்விப் பணிகளிலான நுகர்வோர் கேள்வியின் மாற்றத்தினால் இத்தகைய துறைகளின் அதிகரித்த செலவினம் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. உயர்தரத்திலான பணிகளை நோக்கிய வசதி விருப்பம் போன்ற காரணிகள், அதிகரிக்கப்பட்ட கிடைப்பனவு மற்றும் திருத்தியமைக்கப்பட்ட பணிகள் என்பன தனியார் நலம் மற்றும் கல்விப் பணிகளிலான அதிகரித்த நுகர்வோர் கேள்விக்கு துணைபுரிந்தன. எனினும், இலவசக்

**அட்டவணை 2.9 நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு**

| விடயம் | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 (அ) | 2014 (ஆ) | 13/12 | 14/13 |
| 1. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 37.7 | 36.9 | 35.3 | 7.6 | 5.6 |
| 2. புடவையும், காலணியும் | 5.4 | 5.4 | 5.7 | 10.0 | 15.4 |
| 3. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 12.4 | 13.2 | 13.6 | 17.4 | 13.1 |
| 4. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வீட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு | 3.9 | 3.8 | 3.9 | 6.4 | 12.4 |
| 5. நலம் | 1.6 | 1.6 | 1.6 | 11.0 | 11.6 |
| 6. போக்குவரத்து | 23.5 | 23.3 | 22.8 | 9.0 | 7.7 |
| 7. ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 1.9 | 1.9 | 2.2 | 9.1 | 26.6 |
| 8. கல்வி | 0.4 | 0.4 | 0.5 | 26.7 | 30.1 |
| 9. விடுதிகள், தேநீர்சாலைகள் மற்றும் உணவகங்கள் | 1.7 | 2.0 | 2.4 | 29.5 | 32.3 |
| 10. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 3.9 | 3.8 | 3.6 | 7.8 | 3.8 |
| 11. வெளிநாட்டு வதியுள்ளோர் செலவு | 11.1 | 12.3 | 13.1 | 22.2 | 17.0 |
| 12. கழிக்குக: வதிவற்றோர் செலவு | 3.5 | 4.7 | 4.5 | 45.4 | 7.4 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 10.0 | 10.3 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கட்டணத்துக்கான நலம் மற்றும் கல்விப் பணிகளுக்கான ஏற்பாட்டில் அரச துறையின் கணிசமானளவு ஈடுபாட்டினால் மேற்கூறப்பட்ட துறைகளுக்கான தனியார் நுகர்வு செலவினத்தின் பங்கு குறைந்த மட்டங்களிலேயே விளங்கியது.


**தனியார் துறையால் மேற்கொள்ளப்படும் பொழுதுபோக்கு, களியாட்டம் மற்றும் கலாச்சாரச் செயற்பாடுகள் அதேபோன்று விடுதிகள், உணவுக் கடைகள் மற்றும் உணவகங்கள் வகை மீதான நுகர்வுச் செலவின் பெயரளவு நியதிகளில் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 9.1 சதவீதம் மற்றும் 29.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் முறையே தொடர்ச்சியாக 26.6 மற்றும் 32.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** அதிகரிக்கின்ற செலவிடத்தக்க வருமானத்துடன் மக்களுடைய வாழ்க்கை முறையிலான நகர்வு மற்றும் அதிகரித்த உள்நாட்டு அசைவு என்பன இவ்விரிவாக்கத்திற்கு உதவின. இதன்படி, 2014 இற்குள் இவ்விரு செலவீனங்களின் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு முறையே 2.2 சதவீதம் மற்றும் 2.4 சதவீதமாக அதிகரித்தது. இது பொழுதுபோக்கு செயற்பாடுகளை நோக்கிய அதிகரித்த நுகர்வோர் கேள்வியை பிரதிபலிக்கின்றது.

**அரச செலவீனம் 2013இன் 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2014 ஆண்டு காலப்பகுதியில் பேரளவு நியதிகளின் படி 15.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** பிரதானமாக அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியிலான ரூ1200 அதிகரித்தமையானது, ஆண்டுகாலப்பகுதியில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான அரச செலவீனம் 12.1 சதவீதத்தால் அதிகரித்ததற்கு வகை கூறியது. அரச சேவைகளுக்கான புதிய ஆட்சேர்ப்பும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான அரச செலவீனங்களை நோக்கிய விரிவிற்கு பங்களித்தன. மேலும், மற்றைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான அரச செலவீனமும் 36.2 சதவீதத்தால் அதிகரித்தது. அதனால் இது அரச நுகர்வு செலவீனங்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றது.

## முதலீடு

**பேரளவு நியதிகளில் முதலீட்டு செலவீனம் 2013இன் 10.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 13.5 சதவீதத்தால் ரூ.2,905 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்தது.** முதலீடுகளின் வளர்ச்சிக்கு உதவுகின்ற பொது மற்றும் தனியார் முதலீடுகள் இரண்டும் ஆண்டு காலப்பகுதியில் வளர்ச்சியடைந்தது. முதலீட்டுக்கு முக்கியமான பங்களிப்பாளராகிய கட்டடவாக்க செயற்பாடுகளில் அவதானிக்கப்பட்ட விரிவாக்கம் இந்த வளர்ச்சிக்கு பெரிதாக பங்களித்திருந்தது. இது அரசாங்க உட்கட்டமைப்பு உந்துதல் மற்றும் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய தாழ்ந்த வட்டி வீதத்தால் கட்டவாக்க துறைக்கான அதிகரித்த கொடுகடன் பெரிதும் பங்களித்த மற்றைய கட்டடவாக்கம் மற்றும் வதிவிட தனியார் கட்டடவாக்க நடவடிக்கைகள் காரணத்தால் விரிவடைந்தது. மேலும், ஆண்டுகாலப் பகுதியில் இருப்புக்களிலான மாற்றங்களும் ஒரு திடமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. 2013 உடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் பொறிகள் கருவிகள் மீதான முதலீடு மற்றும் நில மேம்பாடு மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்தி மெதுவாக வீழ்ச்சியடைந்தது. இந்த அபிவிருத்திகளுடன், மொத்த முதலீடானது 2013இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 29.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 29.7 சதவீதத்திற்கு வகை கூறியது.

**வரைபடம் 2.6 முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள்* (ஐ.அ.டொ. மில்லியன்)**




*கடன்கள் உள்ளடங்களாக

**வெளிநாட்டு நேரடி முதலீடு உள்ளடங்களாக பேரளவில் நியதிகளில் தனியார் முதலீடானது 13.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன், 2014இன் மொத்த முதலீடுகளினுடைய 77 சதவீதத்திற்கு வகை கூறியது.** தனியார் முதலீடுகளின் வளர்ச்சியானது ஆண்டு காலப்பகுதியில் கட்டடவாக்க செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட தனியார் துறை கொடுகடனில் வளர்ச்சியின் 22.3 சதவீதத்தால் 2014 காலப்பகுதியில் பிரதிபலிக்கப்பட்டது. இது, ஆண்டு காலப்பகுதியில் நிலவிய ஒப்பீட்டளவில் தாழ்ந்த வட்டி வீதங்களால் ஊக்குவிக்கப்பட்டது. கட்டடவாக்கத்தில் தனியார் துறைகளின் ஈடுபாடானது தனிப்பட்ட வீடமைப்பு, தொடர்மாடிக் கட்டடங்கள் மற்றும் உல்லாச விடுதி செயற்றிட்டம் என்பவற்றில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியது. தனியார் முதலீடானது 2013இன் உள்நாட்டு உற்பத்தியின் விகித அடிப்படையில் 22.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு இறுதியில் 22.9 சதவீதமாக இருந்தது.

**முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கான உட்பாச்சலானது 2013இன் ஐ.அ.டொலர் 1,391 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ஐ.அ.டொலர் 1,528 மில்லியனுக்கு வகை கூறியதுடன், ஆண்டுக்காண்டு வளர்ச்சி 10 சதவீதமாக பதியப்பட்டிருக்கிறது.** சுற்றுலா விடுதி மற்றும் உணவகம் போன்றவற்றில் பணிகள் துறை சார்ந்த செயற்றிட்டங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் மற்றைய பணிகளின் துணைத்துறைகள் என்பவற்றினுடைய உட்பாச்சல் காலப்பகுதியில் மொத்த உட்பாச்சலின் அண்ணளவாக 33 சதவீதமாக (ஐ.அ.டொலர் 506 மில்லியன்) இருந்தது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் அண்ணளவாக மொத்த முதலீட்டு பாய்ச்சலின் 45 சதவீதமாக (ஐ.அ.டொலர் 682 மில்லியன்) இருந்ததோடு தயாரிப்புத் துறைக்கான உட்பாச்சல் ஐ.அ.டொலர் 334 மில்லியனாகக் காணப்பட்டது.

**முதலீட்டு சபை சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடுகள் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ250 பில்லியனாக மதிப்பிடப்படுகிறது.** அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களான, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை துறை மற்றும் புடவை, ஆடை அணிகள் மற்றும் தோல், இரசாயனம், பெற்றோலியம், கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்குகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோகம், பொறிகள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் துறைகள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட முதலீடுகள் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உயர் முதலீட்டு பெறுமதியாக

**அட்டவணை 2.10 இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 (அ) | 2014 (ஆ) | 2013 (அ) | | | 2014 (ஆ) | | | 2013 (அ) | 2014 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| அனுமதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 214 | 194 | 341,863 | 251,415 | 593,277 | 95,010 | 155,230 | 250,240 | 39,104 | 30,192 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 176 | 170 | 337,103 | 251,184 | 588,287 | 93,391 | 154,892 | 248,283 | 37,050 | 27,006 |
| பிரிவு 16இன் கீழ் | 38 | 24 | 4,760 | 230 | 4,990 | 1,619 | 338 | 1,957 | 2,054 | 3,186 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 145 | 145 | 370,654 | 248,044 | 618,698 | 98,833 | 154,976 | 253,809 | 41,768 | 24,669 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ) (உ) | 1,997 | 1,951 | 958,958 | 553,063 | 1,512,021 | 1,133,006 | 622,696 | 1,755,702 | வி.கி. | வி.கி. |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்திட்டங்கள் (ஈ) | 2,649 | 2,718 | 351,230 | 4,032,999 | 4,384,229 | 423,102 | 4,096,373 | 4,519,475 | 396,493 | 409,949 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 1,937 | 2,000 | 329,552 | 4,022,783 | 4,352,335 | 400,113 | 4,085,780 | 4,485,893 | 362,987 | 373,026 |
| பிரிவு 16இன் கீழ் | 712 | 718 | 21,678 | 10,216 | 31,894 | 22,989 | 10,593 | 33,582 | 33,506 | 36,923 |
| **கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு** | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (ஈ) | 2,100 | 2,192 | - | - | 202,219 | - | - | 203,764 | 305,161 | 306,781 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.
குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது ஏனைய குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்க மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு


பதிவிடப்பட்டுள்ளது. எனினும், பணிகள் துறையின் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களுடைய முதலீட்டு பெறுமதி கணிசமான அளவு குறைந்துள்ள அதேநேரம் உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களுடைய மதிப்பிடப்பட்ட முதலீடும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் தாழ்ந்த பெறுமதியை காட்டியது. எனினும், 17ஆம் பிரிவின் கீழ் செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதி சுருக்கமடைந்திருந்ததுடன் இது 2013இனைக் காட்டிலும் அண்ணளவாக 60 சதவீதம் குறைவாகும். முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் வர்த்தகச் செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் ஒட்டுமொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு 2014 ஆம் ஆண்டின் முடிவில் ரூ.4,519 பில்லியனாகக் காணப்பட்டது. 2014இன் இறுதியில் பெறப்பட்ட திரண்ட செயற்றிட்ட முதலீடுகள் ரூ. 1,756 பில்லியனாகும்.

**அரச முதலீட்டு செலவீனம் 2013 இன் 13.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 12.3 சதவீதத்தால் அதிகரித்தது.** அரசாங்க முதலீடுகள் முதன்மையாக கிராமிய அபிவிருத்தி மற்றும் மற்றைய பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை நோக்கி வழிப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டுகாலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிகள், புகையிரத பாதைகள், வலு மற்றும் சக்தி மற்றும் நீர்வழங்கல் மற்றும் நீர்ப் பாசன அபிவிருத்திகள் என்பன தொடர்பான கட்டடவாக்க செயற்பாடுகள் அரச முதலீடுகளினுடைய ஒரு பெரும் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தியது. அரச முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 2013இன் 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இன் 6.8 சதவீதமாகக் காணப்பட்டது.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**பெயரளவு நியதிகளில் பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்க உள்ளக மூலவளங்களின் அளவு 2013இன் ரூ.11,450 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.12,806 பில்லியனுக்கு வகை கூறியது.** இது 2013இன் 10.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 11.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2013 உடன் ஒப்பிடுகையில் 12.8 சதவீதம் என்ற குறைந்த வீதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.9 சதவீதம் என்ற உயர்ந்த வீதத்தில் அதிகரித்திருந்த வெளியக வளங்கள் என்பவற்றின் இணைந்த வெளிப்பாடாக இவ் வளர்ச்சி காணப்பட்டது. மேலும் உள்நாட்டு வளங்களினுடைய பங்களிப்பு 2013இன் 75.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு கேள்வியில் தொடர்ச்சியான வளர்ச்சியால் 76.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. பொருட்கள் மற்றும் சேவைகளினுடைய இறக்குமதிகள் உள்ளக விலைகளிலான உள்நாட்டு உற்பத்தியை விட குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்த வீதத்திற்கு வளர்ச்சியடைந்தது. அதாவது பொருட்கள் மற்றும் சேவைகளினுடைய இறக்குமதிகள் 2013இல் அவதானிக்கப்பட்ட 0.3 சதவீத சுருக்கத்திற்கு எதிராக 9.5 சதவீத வளர்ச்சியடைந்தது. அதேநேரம் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2013இன் 7.2 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, 7.4 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்தது. இது வெளியக வளங்களிலிருந்தான மூலவள கிடைப்பனவு தன்மையினுடைய விரிவாக்கத்தை பிரதிபலிக்கின்றது.

வரைபடம் 2.7 2014இன் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளின்)




அட்டவணை 2.11 நடைமுறை சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்

| விடயம் | சதவீதப் பங்கு % 2013 (அ) | சதவீதப் பங்கு % 2014 (ஆ) | சதவீத வளர்ச்சி % 2013 (அ) | சதவீத வளர்ச்சி % 2014 (ஆ) |
|---|---|---|---|---|
| அ. மூலவளங்கள் | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 75.8 | 76.4 | 14.5 | 12.8 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 24.2 | 23.6 | 0.3 | 8.9 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **10.7** | **11.8** |
| ஆ. பயன்பாடு | | | | |
| நுகர்வு | 60.6 | 60.3 | 10.2 | 11.2 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 22.2 | 21.5 | 15.8 | 8.5 |
| தனியார் | 17.0 | 16.5 | 14.9 | 8.9 |
| அரசு | 5.2 | 4.9 | 19.2 | 7.3 |
| இருப்புக்களின் மாற்றம் | 0.2 | 1.2 | -81.7 | 548.1 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 17.0 | 17.1 | 12.6 | 12.1 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **10.7** | **11.8** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.12 **நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்**

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ யின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 (அ) | 2014 (ஆ) | 2013 (அ) | 2014 (ஆ) | 2013 (அ) | 2014 (ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 8,674,230 | 9,784,672 | 14.5 | 12.8 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 6,940,569 | 7,716,177 | 10.2 | 11.2 | 80.0 | 78.9 |
| தனியார் | 5,803,277 | 6,398,345 | 10.0 | 10.3 | 66.9 | 65.4 |
| அரசு | 1,137,291 | 1,317,832 | 11.3 | 15.9 | 13.1 | 13.5 |
| 3. முதலீடு | 2,560,214 | 2,904,987 | 10.4 | 13.5 | 29.5 | 29.7 |
| தனியார் | 1,965,012 | 2,236,841 | 9.5 | 13.8 | 22.7 | 22.9 |
| அரசு | 595,202 | 668,147 | 13.7 | 12.3 | 6.9 | 6.8 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 1,733,661 | 2,068,496 | 35.2 | 19.3 | 20.0 | 21.1 |
| தனியார் | 1,801,394 | 2,196,187 | 32.2 | 21.9 | 20.8 | 22.4 |
| அரசு | -67,733 | -127,692 | 14.9 | -88.5 | -0.8 | -1.3 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -826,553 | -836,491 | 20.2 | -1.2 | -9.5 | -8.5 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -226,086 | -240,065 | -46.0 | -6.2 | -2.6 | -2.5 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 728,678 | 813,128 | 5.8 | 11.6 | 8.4 | 8.3 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 2,236,253 | 2,641,560 | 23.1 | 18.1 | 25.8 | 27.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**கிடைக்கத்தக்க உள்ள மூலவளங்கள் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.** மூலவளங்கள் பெரும்பாலும் நுகர்வு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இது மொத்த மூலவளங்களின் மொத்த பயன்பாட்டினுடைய 60.3 சதவீதத்தினுடைய ஒரு பங்கை பிரதிநிதித்துவப்படுத்தியது. எனினும், மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் மற்றும் இருப்புக்களிலான மாற்றம் என்பவற்றைக் கொண்ட முதலீடு மீதான மூலவளங்களின் பயன்பாடானது நுகர்வு மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளுடைய ஏற்றுமதி என்பவற்றுடன் ஒப்பிடுகையில் 13.5 சதவீதம் என்ற உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. மேலும், மொத்தப் பயன்பாட்டிற்குள் உள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதிகளுடைய பங்கு 2014இல் 17.1 ஆக இருந்ததுடன், 2013இனை பெருமளவு ஒத்திருந்தது.

## சேமிப்புக்கள்

**உள்நாட்டு சேமிப்புக்கள் 2013 காலப்பகுதியின் 35.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014இல் 19.3 சதவீதத்தால் ரூ.2,068 பில்லியனுக்கு அதிகரித்தது.** இது 2014 ஆண்டு காலப்பகுதியில் தனியா சேமிப்புக்கள் தொடர்ச்சியாக விரிவடைந்திருந்தாலும் கூட அரசாங்க சேமிப்புக்கள் மிகவும் குறைந்திருந்தமைக்கு பிரதானமான காரணியாகவிருந்தது. ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்த அரச மீள் எடுத்த செலவீனத்திற்கு எதிரான அரசிறையின் குறைந்த குறைந்த வளர்ச்சியானது அரசாங்க சேமிப்பின்மை மிகவும் மோசமடைய பிரதான காரணமானது. சேமிப்புக்களினுடைய வளர்ச்சியின் மெதுவடைவு, நுகர்வு செலவீனத்தின் உயர்ந்த வளர்ச்சியால் மேலும் பிரதிபலித்தது. இந்த அபிவிருத்திகளுக்கிடையே, உள்நாட்டு சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியினுடைய விகிதமாக முன்னைய ஆண்டின் 20.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் 21.1 சதவீதத்திற்கு மேம்பட்டது.

தேசிய சேமிப்புக்கள் 2013இன் 23.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2014 ஆண்டு காலப்பகுதியில் 18.1 சதவீதத்தால் ரூ.2,642 பில்லியனுக்கு அதிகரித்தது. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை கொடுக்கல் வாங்கல்கள், 2013இல் பதிவு செய்யப்பட்ட 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11.6 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. இது தேசிய சேமிப்புக்களை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக உதவியது. மேலும், வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாயின் மேம்பாடும் பதிவு செய்யப்பட்ட தேசிய சேமிப்புக்களின் வளர்ச்சியில் சாதகமான பங்களித்தது. இதன்படி தேறிய சேமிப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 2013இன் 25.8 சதவீதத்திலிருந்து 27.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. இந்த அபிவிருத்திகள் சேமிப்புக்கள் - முதலீடு இடைவெளியை 2013இன் 3.7 சதவீத்திலிருந்து 2014இல் 2.7 சதவீத்திற்கு ஒருங்குவதற்கு பங்களித்தது.